# மனிதப் புரட்சி


தாதா தர்மாதிகாரி



பரமசிவ நிலையம்,
127, லாயிட்ஸ் ரோட்,
சென்னை-6.



ஹிந்தியிலிருந்து
மொழி பெயர்த்தவர்
G. சுப்பிரமணியம்



சர்வோதய பிரசுராலயம்
( அகில பாரத சர்வ சேவா சங்கம் )
தஞ்சாவூர்.

## பூதானப் பிரசுரம் T-51/1,99,000

பூதானம், சம்பத்து தானம் முதலிய அடிப்படைத் தத்துவத்தை ஹாஸ்யத்துடன் எளிய நடையில் விளக்கு வதில் ஆச்சார்ய தர்மாதிகாரி பிரசித்தி பெற்றவர். ஹிந்தி பூதான் யக்ஞம்" பத்திரிகையில் அவர் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பு ஒரு நூலாக வெளிவந்துள்ளது. அதன் மொழிபெயர்ப்பே இது. இதைப்பற்றி ஆச்சார்ய விநோபா கூறியதாவது :

"கருத்துக்களை தர்மாதிகாரி வெளியிடும் முறையே தனி. சிலருக்கு இது விளங்காது. தற்கால ரீதியில் இவர் கட்டுரைகள் அமைந்திருப்பதால், படித்தவர்கள் முக்கிய மாக மாணவர்களுடைய கருத்துக்களை மாற்றும் சக்தி உடையது. பூதான இலக்கியத்தில் இருந்த குறையை இது நீக்கும் என நம்புகிறேன்"

இந்தப் புத்தகத்தை வெளியிட கொஞ்சம் தாமதம் ஏற்பட்டுவிட்டது. அதற்கு வருந்துகிறோம்.

தஞ்சாவூர்,
ஜூன் 1956.

சர்வோதய பிரசுராலயம்,
அகில பாரத சர்வ சேவா சங்கம்.

# வினோபாஜியின் முகவுரை.

தாதா தர்மாதிகாரி எழுதிய பூமிதான யக்ஞ, சம்பத்து தான யக்ஞக் கட்டுரைகள் புத்தக வடிவமாக தொகுத்து வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. இக்கட்டுரைகள் முழுவதும் நான் என்னவோ படிக்க முடியவில்லை. ஆனால் "சர்வோதயத்தில்" வெளியானவைகளை மேலாகப் பார்த்து விடுவேன். வாழ்க்கை சம்பந்தமான பல பிரச்னைகளில் அவர் கருத்தும் என் கருத்தும் இணைந்ததாகவே அமைந்திருக்கிறது. கருத்தை வெளியிடுவதில் அவர் பாணியே தனி. இது சிலருக்குப் புரியாததாலே அவர் கருத்து மின் விசைபோல (Shock) தாக்குகிறது. எனினும், தற்காலத்து (Latest) முறையில் பொருள் படுத்திக் கூறுவதால் அறிவாளிகளுக்கு, முக்கியமாக மாணவர்களுக்கு இவர் கருத்துக்கள் மனமாற்றச் சாதனமாக விளங்குகின்றன.

பூமிதான யக்ஞ இலக்கியத்தில் இப்புத்தகம் ஒரு குறையை நிறையாக்குகிறது என்று நான் நம்புகிறேன்.

லக்ஷ்மி ஸராய்,
27—10—53

வினோபா

# அட்டவணை.


1. காந்தி முறையின் மாற்ற உருவம் ... 1

2. பூமிதான யக்ஞ பீஜ கணிதம் ... 5

3. தான முறையில் புரட்சி ... 12

4. வர்க்க அழிப்பு முறை ... 29

5. புரட்சியின் வித்து ... 35

6. களர் நிலம் தான ஆக்ஷேபனை ... 43

7. நிலம் பெறுபவர்கள் கௌரவம் ... 47

8. பூமிதான யக்ஞம்: சத்தியாக்கிரகத்தின் ரூபம் ... 52

9. புதுயுகப் பெண்களுக்கு நல்ல வாய்ப்பு ... 60

10. சம்பத்து தானத்தின் புரட்சிப் பாதை ... 65

11. சம்பத்து தானத்தின் விஸ்வரூபம் ... 70

# மனிதப் புரட்சி

## 1

### காந்தி முறையின் மாற்ற உருவம்

'விநோபாவின் பூமிதான யக்ஞ சோதனை காந்தி முறையின் இறுதி உருவம்' என்றார் காலஞ்சென்ற கிசோரி லால் மச்ருவாலா. ஆனால் சில முன்னேற்றப் பத்திரிகைகள் விநோபாவின் இம்முறையைக் கண்டித்தன.

இந்தமாதிரி இயக்கத்தால் ஆட்சியின்மை (அராஜக வாதம்) என்ற எண்ணம் வலுத்து நாட்டில் சட்டபூர்வமான ஆட்சிக்கு மதிப்பு இருக்காது என்பதே இவர்கள் ஆக்ஷேபனை.

### மக்கள் ஆமோதிக்கும் ஆதாரம்

இந்த முறையில் ஆழ்ந்த குறைபாடு ஒன்று உண்டு. எந்த அரசியல் சட்டத்திற்கும் மக்கள் அதை ஒப்புக் கொள்வது அவசியமாகும். இம்மாதிரியான ஆதரவு இருந்தால் சட்டத்தை அமல் நடத்த தண்டனை முறைக் குச் சரணடைய வேண்டியதில்லை. எனவே ஆட்சிக்கு மக்களிடம் தானாகவே இயங்கும் ஆதரவும், ஒத்துழைப் பும் ஏற்படுத்துவது ஒவ்வொரு பொதுஜன ஊழியரின் முக்கிய கடமையாகும். மக்கள் தானாகவே முயற்சி செய்

தால் அந்த ஆட்சிக்கு அது ஒரு பலமும், நல்ல அடிப் படையும் அளித்ததாகும். விநோபாவின் காரிய திட்டம் இதுதான்.

*மனிதப் புரட்சி:-*

தேசமெங்கும் ஜமீன்தாரி முறையை கொஞ்சம் கொஞ்சமாக எடுக்கவேண்டுமென்று சட்டசபையில் மசோதா கொண்டுவரப்பட்டது. அது எதிர்க்கப்பட்டது, பல இடையூறுகள் செய்தார்கள். இந்தச் சட்டம் ஒழுங் கானதா என்ற பிரச்னை நீதி மன்றத்தில கிளப்பப்பட்டது. இந்த எதிர்ப்புச் சக்தியை மாற்றவே விநோபா தன் வகை யில் வழி செய்கிறார்கள். செல்வத்தைப் பிரித்து சமமாக வாழும் வகையில் பணக்காரர்கள் ஒத்துழைத்தால் மனித பலி ஏற்படாமலேயே புரட்சி நடக்குமென்று அவர் சீமான் களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறார். ஆயுதம்தாங்கி, பலாத்காரப் புரட்சியிலோ அல்லது பலவந்தமாக சொத் துக்களைப் பிடுங்குவதிலோ இருதரப்பிலும் மனக்கசப்பு ஏற்படும். இதனால் சமமாக பிரிவினை ஆகக் கூடுமானாலும், மனதிலே ஆழ்ந்த புண்பட்டிருக்கும்.இதனால் நமது கலாச் சாரம் கடுமையாக நஷ்டமாகும். இந்த ஆபத்திலிருந்து மனிதனைக் காப்பாற்ற விநோபா சங்கல்பம் செய்துகொண் டிருக்கிறார். அவருடைய சக்தி குறைவாக இருக்கலாம். ஆனால், "ஸ்வல்ப மப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்" தர்மம் சிறிதாகஇருந்தாலும் பெரிய பயத்திலிருந்து அது நம்மைக் காப்பாற்றும் என்று பகவான் கிருஷ்ணன் சொல்லியிருக்கிறார்.

### சிறிய - பெரிய நிலச்சுவான்தார் கூட்டம்.

பூமி முழுவதற்கும் அதிபதி சக்ரவர்த்தி; ஒரு நாட்டின் அதிபதி அரசன்; சிறிய நிலப்பரப்பின் அதிபதி ஜமீன்தார் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்கள். இம்மாதிரி ஒருபுரம் சிறிய, பெரிய நிலப் பிரபுக்கள் இருந்தால், மறுபுரம் பூமியை உழுது பயிரிடும் சிறிய பெரிய நில ஊழியர்களும் இருந்தார்கள். இன்று நில ஊழியர்கள், தன் உழைப்பால் நிலத்தை உழுபவர்கள், தானும் பூமிக்கு அதிபதியாக ஆக விரும்புகிறார்கள். முன்னாளில் சிறிய பெரிய நிலச்சுவான்தாராக இருந்தார்கள்; இன்று எல்லாரும் சமமான அளவில் நிலப்பிரபுவாக ஆக விரும்புகிறார்கள். எப்படியாயினும் சொந்த நிலம் வேண்டும் என்று கோருகிறார்கள்.

### வருங்கால சமூகம் அரசர்களாக ஆகாமல் உற்பத்தியாளராக அமையும்.

வருங்காலத்தில் சமூகம் அரசர்களாக ஆகாமல் பூமி அன்னையின் புத்திரர்களாக ஆகவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுத்த விநோபா முயலுகிறார். எஜமான்களுக்குப் பதிலாக உற்பத்தியாளர் சமூகம் ஏற்படவேண்டும். இயற்கையின் செல்வத்தை உண்டு ஒழிப்பவர்களுக்குப் பதிலாக இயற்கையின் நிறைவையும், உற்பத்திச் சக்தியையும் பெருக்க வைப்பவர் சமூகம் ஏற்பட வேண்டும்.

### சாஸ்திர சம்மதமும், அனுபவசித்தமும் உள்ள முறை

இதற்கு இருவித எண்ணங்களை உருவாக்கவேண்டும். பணக்காரரிடம் தானாகவே விட்டுக்கொடுக்கும்

எண்ணமும், சிறிய நிலச்சுவான்தார்களிடம் தான் தர்ம கர்த்தா என்ற எண்ணமும் ஏற்படுத்தவேண்டும். அஹிம்சாபூர்வமான புரட்சிக்கு இதுவே முறை, விநோபா இம்முறையை நன்கு அறிந்தவரும், அமுல் நடத்துபவரும் ஆவார். அவருடைய இந்த சோதனை சாஸ்திர சம்மதமும், அனுபவசித்தமாகவும் இருக்கிறது. இது மக்கள் நலனை ஏற்படுத்தக் கூடியது என்பது நிச்சயம். பொருளாதார சுதந்திரம் விரும்பவும் நம் நாட்டு மக்கள் அனைவரும் இப்பெரும் பணியில் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் ஒத்துழைக்க வேண்டும். இதைக் குறை கூறுவதால் யாருக்கும் பயனில்லை.

*தங்கத்திற்கு மதிப்பில்லை, மண்ணுக்கே மதிப்பு*

விநோபாவினுடைய சோதனையில் ஒரு விசேஷ அம்சம் பொன்னிற்கு மதிப்புக் கொடுக்காமல் மண்ணிற்கு மதிப்புக் கொடுப்பதேயாகும். ஆகையால்தான் அவர் யாரிடமும் பணம் வாங்குவதில்லை. மண்ணையே கேட்டு வாங்குகிறார். பூமியன்னையின் மிகச் சிறந்த உபாசகர் அவர்.

*மண்ணிலே சிருஷ்டியின் பெருமை*

ஸ்ரீ கிருஷ்ணன் மண்தின்ற பொழுது எசோதை அவனை மிரட்டினாள். "நான் மண் தின்னவில்லை" என்று சொல்லி தன் வாயைத் திறந்து கிருஷ்ணன் காட்டிய

பொழுது எசோதை அச்சிறு வாயில் அகில உலகத்து பெருமையும் கண்டாள். விநோபாவினுடைய இந்தச் சாதாரண பரிசோதனையிலும் இது அடங்கி இருக்கிறது.

உலகில் பூபதி (சக்ரவர்த்தி) நிலத்தைச் சேர்க்கிறன், மக்கள் தலைவன் (அரசன்) ஆட்களைச் சேர்க்கிறன், பணக்காரன் செல்வத்தையும் சேர்க்கிறன். ஆனால் மனிதப் புரடசியின் நவீனத் தலைவன் அன்பை மட்டும் சேகரித்து பூமியின் பளுவைக் குறைக்கிறர்.

## 2

### பூமிதான யக்ஞ பீஜ கணிதம்

பூமிதான யக்ஞ இயக்கத்தைப் பற்றி பொருளாதார நோக்கிலே பல பெரிய பொருளாதார நிபுணர்களும் அரசியல் தலைவர்களும் ஆலோசனை செய்திருக்கிறர்கள். இம் மாதிரி பொருளாதாரத் துறையில் பூதானத்தைப் பற்றி கணக்கிடுவது அவசியமும் உசிதமும் ஆகும். விநோபாவினுடைய இருசூத்திரங்கள் பிரசித்தமானவை. "கடவுளுக்கு அடுத்த படியாக நான் கணித சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவன்" என அவர்கூறுகிறர். புண்ணியம், பரமார்த்தம், என்பது நல்ல கணிதத்தின் மாறு பெயர் என்றும் அவர் சொல்வதுண்டு; அதாவது தன் திட்டங்கள் எல்லாவற்றையும் விநோபா மிக ஜாக்கிரதையாக கணித ரீதியாகவும், கணக்கிட்டு அலசி ஆராய்வதுமுண்டு. ஆனால் இந்த பூமிதான யக்ஞ இயக்கத்தில் நெடுங்கணக்கை விட பீஜ கணித முறையே மிகவும் பொருந்தும். நெடுங் கணக்கினுடைய போக்கு, எண்களையும், ரொக்கத்தையும் பொருத்

தது. ஆனால் பீஜ கணிதத்தில் இலக்கத்திற்கு பதிலாக சின்னங்கள் Symbols குறிக்கப்படுகின்றன. பூதான யஞ் கத்தில் " தானம், " " யக்ஞம், " இவ்விரண்டு சொற் களுமே சின்னங்கள் ஆகும்.

*தானம் என்ற சொல்லின் உட்கருத்து*

தானம் என்ற சொல் "செல்வத்தின் சமப் பிரிவினை" என்பதின் சின்னமாகும். சேர்த்து வைத்தவன் தன் சேமிப்பை வினியோகிக்க தானம் செய்தாக வேண்டும். செல்வம் அனைத்தும் சமமாக பங்கீடு ஆகாமல் இருக்கும் வரையில் அல்லது நியாயமான முறையிலேனும் வினியோ கம் ஆகாத வரையில் தானம் பூர்த்தியானதாகாது.

*சமப் பங்கீடும், நியாயமான வினியோகமும்*

சமப் பங்கீடும், நியாயமான பிரிவினை இரண்டிற்கும் வேறு பாடுண்டு. ஏனெனில் மனிதனுடைய தேவையும் குடும்பத்தின் தேவையும் வேறுபட்டிருக்கலாம். "தேவைக் குத் தக்க வினியோகம் "என்பது நியாயமான வினியோகம் என்று சொல்லுகிறோம். நெடுங்கணக்கு முறையில் வினி யோகிப்பது சிறைச் சாலையில் பார்க்கலாம். ஒவ்வொருகை திக்கும் ஆறு ஆறு ரொட்டிகள் கிடைக்கின்றன. ஐந்து தின்பவனும் குற்றவாளியாகிறான்; ஏழு கேட்பனும் குற்ற வாளியாகிறான். எனவே சாதாரண வகுத்தல், பெருக்கல் முறையில் கணக்கிடுவது வசதியாகத் தோன்றினாலும் அது நியாயமாக இருக்காது.

சேர்த்துவைப்பது என்பது அநியாயமான முறை என் பதால்தானே நாம் சேர்த்துவைத்துள்ளதைப் பிரித்துக்

கொடுக்கிருேம். நாம் ஏற்றத்தாழ்வை அகற்ற விரும்பு கிருேம் என்பதை மனதில் கொள்ள வேண்டுமே அல்லாமல் சமூகத்தில் நிலவிவரும் பலதிறப்பட்ட முறையையோ அல்லது ஒரு குறிப்பிட்ட நடை முறையையோ மாற்ற விரும்புகிருேம் என்று எண்ணக்கூடாது.

## தானத்தின் சிறப்பு

தானத்தில் செல்வத்தின் சிறந்த பிரிவினே என்ற கருத்து உள்ளது. தங்கள் சேகரிப்புக்கு பிராயச்சித்தம் என்ற முறையில் செல்வச் சீமான்கள் தானம் அளிக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்வார்களே ஆனல் சட்டபூர்வமாக செல்வத்தைப் பிரிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. (expropriation) செல்வத்திற்கு வரம்பு கட்டும் சட்டம் வரும் பொழுது இவர்களும் அதை ஒப்புக்கொள்வார்கள். தானம் என்ருல் நஷ்டஈடு என்ற எண்ணத்திற்கே இடமில்லே. தானம் கொடுப்பவன் அத் தானப் பொருளுடன் தன் தானம் பூர்த்தி ஆகவேண்டும் என்பதற்காக இன்னும் தட்சிணேவேறு கொடுத்து விடுகிருன். பழம் கருத்துக்கொண்டவர்கள் பிராமணர்களுக்கு பசு, வீடு அல்லது எந்தப் பொருள் தானம் கொடுத்தாலும் அத்துடன் தானம் பூர்த்தியடைய தட்சிணேயும் கொடுப்பது வழக்கம். "நான்", "என்னுடைய" என்ற எண்ணமே அழிவதுடன் நான் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் என்ற எண்ணமும் தானத்தில் அடங்கியுள்ளது. சேர்த்து வைத்திருப்பவன்தானே இஷ்டப்பட்டுத் தன் செல்வத்தை சமமாக விநியோகிக்க தொடங்குவானே

யானல் அவனுடைய செல்வம் கரையுமேயன்றி அவன் மதிப்பும் தைரியமும் குறைவதில்லை. பணக்காரத் தன்மையை அழித்து சீமான் என்ற பெருமையையும், தைரியத்தையும் காப்பாற்ற இது ஒரு சிறந்த முறையாகும். ஏழை, பணக்காரர் என்ற இரு பாலரின், மனிதத் தன்மையை வளர்க்கிறது.

## யக்ஞமே தியாகம்

யக்ஞம் என்பது உடைமையைத் தியாகம் செய்வது என்பதாகும். சமூகத்தில் பெரிய சொத்துரிமைக்குப் பதிலாக சிறிய சொத்துரிமையை உண்டாக்க விரும்பவில்லை. சொத்துரிமை என்ற முறையையும், ஆசையையும் ஒழிக்கவே விரும்புகிறோம். ஆகையால்தான் வினோபா பெரிய பெரிய நிலச்சுவான்தார்களிடம் நிலம் கேட்பதோடு மட்டும் அன்றி ஒன்று அல்லது அரை ஏக்கர் வைத்திருக்கும் சிறிய நிலச் சுவான்தார்களிடமும் தானம் வாங்குகிறார். அரை ஏக்கர் நிலமுடையவன் தன் முழுச் சொத்தையும் கொடுத்து விடுவானேயானல் அதையும் வினோபா எடுத்துக் கொள்கிறார். ஏனெனில் ஏழையின் தானம் யக்ஞ மயமாகுகிறது. ஆயிரம் ஏக்கர் உடையவன் தொளாயிரம் ஏக்கர் நிலத்தை கொடுப்பானேயானலும் அவன் தன் வயிற்றுக் கஞ்சியை மற்றவனுக்குக் கொடுத்தவன் ஆகமாட்டான். தன் வாழ்க்கையை தியாகம் செய்தவன் ஆகமாட்டான். அவன் தன் செல்வத்தின் பெரும் பாகத்தையே கொடுத்தவன் ஆவான். ஆனல் ஐந்து ஏக்கர்காரன் $2\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தைக் கொடுப்

பானேயானுல் அவன் தன் பாதி செல்வத்தைக் கொடுப்ப துடன் தனக்குக் கிடைக்கும் கஞ்சியில் அரைவயிற்றுக் கஞ்சியையும் கொடுத்தவன் ஆவான். எனவே இரண் டாமவன் கொடுக்கும் தானம் ய க் ஞ ரு ப ம் ஆகிறது. ஏனெனில் அவன் தன் சொத்துரிமை என்ற எண்ணத்தை ஆகுதி செய்து விடுகிருன்.

### பூமியன்னையின் முறையீடு

நாம் ஏற்படுத்த விரும்பும் சமூகத்தின் மக்கள் முத லாளிகளாக இருக்க மாட்டார்கள், உற்பத்தியாளராகவே இருப்பார்கள். இவ்வுலகில் சக்ரவர்த்தியாகவோ (பூபதி), அரசராகவோ, (நரபதி), இல்லாமல் எல்லா மனிதர்களும் பூமியன்னையின் புத்திரர்களாக வாழ்வார்கள். எஜமானர்க ளாலும், (சதிபதி) முதலாளிகளாலும் பூமியன்னை மிகவும் அலுத்துப் போய்விட்டாள். "இந்தப் பாவத்தின் சுமை என்னுல் தாங்கமுடிவதில்லை. என் பிள்ளைகள் எல்லோரும் என் எஜமானர்கள் ஆக விரும்புகிருர்கள்" என்று பூமி யன்னை பசு உருவெடுத்து கடவுளிடம் முறையிடத் தொடங்கி விட்டாள். அரசுரிமை இனி எந்த அரசனிடத் திலும் அல்லது அரச வம்சத்தாரிடத்திலோ இல்லாத நிலை ஏற்பட்டிருப்பதைப் போல இந்த பூமியும் எந்த எஜ மானனுக்கும் சொந்தமானதாக இருக்காது என்று கட வுளும் பூமாதேவிக்கு அபயம் அளித்திருக்கிருர். பூமி யன்னையின் இந்த வேதனையே கடவுளுடைய அறிகுறியாக அமைந்து இன்று எல்லா இடத்திலும் பிரதிபலிக்கிறது.

### சொத்துரிமை இல்லாமை

"வருங்காலத்தில் முதலாளிகளின் உலகமாக இல்லாமல் உற்பத்தியாளரின் உலகமாக இருக்கும்" என்று அர்ச் ஸைமன் (Saint Simon) சொன்னார். "சீமான்கள் எல்லோரும் தங்களை தன் செல்வத்திற்கு தர்ம கர்த்தாவாகக் கருதவேண்டும்" என்றார் காந்தி. பெரிய சீமான்கள் தன செல்வத்தை விட்டு விடுவார்கள், சிறிய செல்வந்தர்களும் தன்னிடம் உள்ள செல்வத்திற்குத்தான் முதாலாளி என்று கருதமாட்டார்கள்.

### யக்ஞத்தின் பரந்த நோக்கம்

"சில பெரிய முதலாளிகளுக்கு பதிலாக உலகில் அதிக சிறிய சிறிய முதலாளிகளை ஏற்படுத்தி விடுவீர்களே யானால் பின்பு கூட்டுறவு தத்வத்தை ஏற்படுத்துவது மிகவும் கடினம். ஏனெனில் இந்தச் சிறிய சிறிய முதலாளிகள் எல்லோரும் தங்கள் தங்கள் சொத்தைக் காப்பாற்றிக் கொள்ள சச்சரவிட ஆரம்பிப்பார்கள்" என்று ஒருவர் வினோபாவிடம் சொன்னார். ஆகையால் தான் வினோபா தன் பூமிதான இயக்கத்தில் யக்ஞம் என்பதைச் சேர்த்தார். யக்ஞம் என்று ஏற்பட்டு விட்டதானல் அதில் சிறியோர் பெரியோர் அனைவரும் தங்கள் இஷ்டப்படியும், சக்திக்குகந்தபடியும் ஆகுதி கொடுக்க முன் வருகிறார்கள் என்பதே யக்ஞத்தின் பரந்த நோக்கம்.

### உப்பு சத்தியாகிரக உபமானம்

அடையாள பூர்வமான இயக்கத்தில் புண்ணியம் 'ற கருத்திற்கு மிகப் பெருமையுண்டு. புண்ணிய

எண்ணம் சூழ்நிலையை பரிமளிக்கச் செய்கிறது. காந்தி ஒருபிடி உப்புக் காய்ச்சிஞர். இதஞல் சமுத்திரம் உலர்ந்து விடவும் இல்லை, சமுத்திர நீரில் உப்பு தீர்ந்து விடவும் இல்லை. ஆஞல் இந்தச் சிறிய அடையாள பூர்வ மான முயற்சி சூழ்நிலை முழுவதையும் மந்திர வேகத்தில் மாற்றிவிட்டது. அதேபோல விஞேபாவின் இந்த இயக் கம் சட்டபூர்வமான சமபங்கீடு என்ற எண்ணத்தால் உல கின் சூழ்நிலையை பரிமளிக்கச் செய்து விடும்.

### நைவேத்தியம் இல்லாமல் பிரசாதம் ஏது?

இன்ஞெரு விஷயம். முடியாட்சி மறைந்து குடி யாட்சியேற்பட்டதும் ஆட்சியையும் அதிகாரத்தையும்பங்கு கொள்ள எல்லோரும் கை யேந்துகிருர்கள். அதுபோல செல்வப் பிரிவினை என்றவுடன் ஒவ்வொருவரும் சிறிய, பெரிய, பாத்திரமும் கையுமாக லக்ஷ்மியின் கோவிலை யடைந்து விட்டார்கள். "காணிக்கையும் நைவேத்தியமும் கொண்டுவந்தால்தானே உங்களுக்கும் பிரசாதம் கொடுப் பேன்" என்கிருள் லக்ஷ்மி. எனவே சிறிய பெரிய உபாச கர்கள் அனைவரும் தங்கள் தங்கள் காணிக்கையை லக்ஷ் மியின் பாதங்களில் அர்ப்பணம் செய்தால்தான் அவள் பொக்கிஷம் நிறையும். சொத்து அனைத்தும் தேசிய உடமையாக ஆக வேண்டும் என்ற மனித உசிதமான காரியம் விஞேபாவின் பூமிதான இயக்கத்தில் அடங்கி இருக்கிறது. இதன் காரணமாகவே இப்புரட்சி நெடுங் கணக்காக அமையாவிட்டாலும் பீஜ கணிதமாக அமைந் திருக்கிறது என்று கூறுகிருேம்.

# 3

## தான முறையில் புரட்சி

இந்த யக்ஞத்தைப்பற்றி அடிப்படை தப்பபிப்ராயம் இருப்பதால் ஊழியர்கள் மனதிலும் அனாவசியமான ஆக்ஷேபனைகள் ஏற்படுகின்றன. "தானம்" என்ற சொல்லைப்பற்றி சாதாரணமாக ஏற்படும் ஆக்ஷேபனைகளைத் தீர்க்க ஸ்ரீ விநோபாவும், இப்புத்தக ஆசிரியரும் முயற்சித்திருக்கிறார்கள். அப்படியிருப்பினும் பல சிறந்த ஊழியர் மனதிலும் ஏதோ சந்தேகம் இருந்தே வருகிறது. "தானம்" என்ற சொல்லின் பொருளும் அதன் பரவல் தன்மையும் ஊழியர்களுக்கு நன்கு புரியவில்லை என்பதே இதன் காரணம்.

## உழைப்பாளர் புரட்சி

பூமிதான யக்ஞத்தில் பணக்காரர்களே தானம் கொடுக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. விநோபா ஏழைகளிடத்திலும் தானம் கேட்கிறார்; நன்றியுடன் பெற்றுக்கொள்கிறார். இதைத்தவிற வேறு எந்த முறையிலும் ஏழைகளின் புரட்சி சேனையை ஏற்படுத்தவோ, அதை இயங்கவைக்கவோ முடியாது என்கிறார் விநோபா. ஏழை மக்களின் ஆட்சி ஏற்படுத்துவதுடன் அவர்கள் சொத்துடமையும் ஏற்படுத்த விரும்புகிறோம். இதுவே பொருளாதாரப் புரட்சியின் செயல்முறை. ஏழைகளின் சொத்துடமை என்றால் உற்பத்தியாளர் உடமை என்பது பொருள். இன்று உற்பத்தியாளரிடம் உற்பத்தி சாதனங்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகையால் ஏழைகள்

புரட்சி ஆயுதங்கள் மூலமாக நடக்க முடியாது. ஏழை என்று சொன்னாலே பணத்தின் பலம் அவனிடம் இல்லை என்பது வெளிப்படை. எனவே, பணமும் இல்லாமல், ஆயுதமும் இல்லாமல் ஏழைகளின் சேனை ஏற்படுவது எப்படி என்பதே பிரச்னை.

*ஏழைகளின் வெளவாமை*

ஏழைகள் வெளவாமை என்ற சோதனையைத் தொடங்கவேண்டுமென்று பூமிதான யக்ஞத்தை ஆரம்பித்தவர் திட்டமிட்டிருக்கிறார். ஏழையின் சேமிப்பு, அவன் சொத்து என்பது மிகவும் குறைவு. அதை "சொத்து" என்று கூறுவதே கேலிக்கூத்தாகும். அவ்வளவு சிறிய சொத்துரிமையையும் விடாது பிடித்திருக்க வேண்டும் என்று ஏழை விரும்புகிறான். இச்சிறுசொத்தை விட்டுவிட்டால் எனக்கு வேறு கதி இல்லையே என்று அவன் பயப்படுகிறான். சிறிய சொத்துடமை என்பதை ஏழ்மை எனலாம். எனவே, ஏழை இச்சிறு சொத்துடமையை சமூகச் சொத்து உடமை என்பதற்கு விட்டு விட்டால் அவன் நஷ்டப்படுவது ஒன்றுமில்லை. அதற்கு பதிலாக அதிக லாபமே அடைகிறான். ஆகையால் ஏழை மக்களுக்கு "தானம்" என்பது யக்ஞ ரூபமாக அமைகிறது.

*ஏழைகளின் சேனை*

சமூக சொத்து என்ற யக்ஞத்தில் ஏழையும் தன் சிறு சொத்திலிருந்து ஒரு பாகம் ஆஹுதியாக அர்ப்பணம் செய்தால் அந்த ஏழை மற்ற ஏழைகளுடன் அன்பு

என்ற பாசத்தால் ஒற்றுமையை ஏற்படுத்துகிருன். தியாகம், பலிதானம் என்ற கட்டினுல் சேர்ந்த இந்த ஏழைகள் ஜயிக்கமுடியாத, பலம் பொருந்திய சேனையைத் திரட்டி விடுவார்கள்.

### *ஏற்றத்தாழ்வை அழிப்பதேன்*

பணக்காரன் ஏழை என்ற ஏற்றதாழ்வை அழிக்க விரும்புவானேன்? பணக்காரத்தனம், ஏழ்மை என்பது மனிதனை மனிதனிடமிருந்து பிரித்து விடுகிறது என்ற காரணத்தால்தானேயல்லவா? பிளவு ஏற்படுத்தும் முறை நியாயமற்றது. மனிதனை மனிதனேடு சேர்த்துவைக்கும் முறையே நமக்குத் தேவை. பணக்காரர்களிடம் வெறுப்பு என்ற அடிப்படையில் ஏழைகள் அனைவரும் ஒன்றுபட்டால் மக்களிடம் பரஸ்பரம் அன்பு, நேசமனப்பான்மை என்ற கட்டுப்பாடு இருக்காது. பணக்காரர்களின் சொத்துக்களைப் பிடுங்கின பிறகு உற்பத்தியாளர் அனைவரையும் செயற்கை முறையில் கட்டுப்படுத்தி வைக்கவேண்டியிருக்கும். இந்த செயற்கை கட்டுப்பாடு எப்போது அழிந்துவிடுமோ என்ற பயம் எப்பொழுதும் இருந்தே வரும். ஆகையால் இந்தக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக்கவும், பலப்படுத்தவும் முயற்சி நடந்துகொண்டே இருக்கும். இப்படிப்பட்ட கட்டுப்பாடு உடனடியாகவோ அல்லது நீண்டநாட்களுக்குப் பின் வருங்காலத்திலோ நீங்கி விடும் என்று எதிர்பார்க்கவே முடியாது.

## புரட்சியின் ஆதாரம்

எனவே நேச அடிப்படையிலே புரட்சியின் செயல் முறை அமையவேண்டும். பூமிதான யக்ஞ இயக்கத்தின் பெருமை இதுவே. ஏழைகள் தன் சிறிய சொத்துரிமையைவிட்டுக் கொடுத்து ஒருவர் மற்றவருடன் நேசமுறையில் ஒன்றுபடுகிறார்கள். இவ்வாறு ஏழைகளிடம் சகோதரத்வம் என்ற அடிப்படை ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால், பின்பு எண்ணிக்கையில் மிகச் சிலரான பணக்காரர்கள் தனித்து இருக்க முடியாது. பல ஏழைகளின் உழைப்பை விலைக்கு வாங்கத் தங்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதே பணக்காரர்களின் தற்காலத்து பேச்சு. இந்த வாய்ப்பு அவர்களுக்கு இல்லையென்றால், பணக்காரத்தனம் என்ற அஸ்திவாரமே ஆட்டங்கண்டு விடும்.

## ஆட்சி மயக்கம்

மனித சமூகத்தை இவ்வளவு தூரம் நம்புவது நடைமுறையாகாது என்ற கடைசி ஆக்ஷேபனை பாக்கியிருக்கிறது. இந்த ஆக்ஷேபனைக்குப் பதில் கூறும் வகையில் பணிவுடன் மாற்று கேள்வி கேட்கக்கூடும். செல்வம் மக்களின் நேர்முறையைக் கெடுத்து விஷத்தை உண்டாக்குமேயானால் அதிகார விஷத்தின் கொடுமை சொத்து விஷத்தைவிட குறைந்ததா என்ன? ஏழைகளின் நல்வாழ்விற்கு, வாழ்க்கை வளம்பெற ஒரு சிலர் மட்டும் ஆயுத உதவியால் ஆட்சியையும், அதிகாரத்தையும் கைப்பற்றுவார்களென்றால் அவர்கள் மட்டும் மனிதனுக

இல்லாமல் தேவதைகளாக மாறிவிடுவார்களா ? அவர்க ளிடம் ஆட்சி மயக்கம் ஏற்படாதா ?

## மனித நம்பிக்கை

மனிதனுடைய நல்ல எண்ணத்தில் எங்காவது நம் பிக்கை வைத்தாக வேண்டியிருக்கிறது என்பதே இதன் பொருள். மனிதனிடம் நம்பிக்கையில்லாத அடிப்படை யில் மனித முன்னேற்றப் புரட்சி என்பது சாத்தியமில்லை. பூமிதான யக்ஞ இயக்கத்தில் ஒருவன் தானம் வழங்கும் பிரபுவென்றும் மற்றவன் பிச்சைக்காரன் என்றும் கருதப் படுவதில்லை. இந்தத் தானம் தியாகம், சமர்ப்பணம் என்ற செயல் முறையின் தொடக்கமே. தானம் வழங்கும் பணக்காரன் புரட்சி சேனையில் சேர்ந்துவிடுகிறான் என்றால் தியாகம் செய்யும் ஏழையும் புரட்சி உடையணிந்து புரட்சி யின் முன்னோடியாகவே ஆகிவிடுகிறான்.

## புரட்சிப் படை

ராமராஜ்யப் படை விசித்திரமாக இருந்தது போலவே பலம் பொருந்தியதாகவும் இருந்தது. விநோபாவின் இந்த கிராமராஜ்யப் படையும் அற்புதமானதும், பராக் கிரமம் உள்ளதுமாகவே இருக்கும்.

“தானம்” என்ற சொல்லில் தயவு, உபகாரம், நன்றி என்றெல்லாம் பல புரட்சிக்காரர்களுக்குத் தோன்றுகிறது. தானம் என்ற முறையில் தானம் பெற்றவன் நன்றி என்ற சுமையைத் தாங்கவேண்டி வருகிறது, தானம் கொடுத்த வனே பரோபகாரி, வள்ளல் என்று பெருமைப் படுகிறான்,

எனவே "தானம்" என்ற இந்த முறை ஏழையின் மதிப்பைக் குறைப்பதாகவும், பணக்காரர் மதிப்பை உயர்த்துவதாகவும் அமைகிறது என்று கருதுகிருர்கள்.

*தானத்தின் பரம்பரைக் கருத்து*

பரம்பரையாக இருந்துவந்த தானத்தின் கருத்திற்கும் விளுேபாவின் தானம் என்ற கருத்திற்கும் அடிப்படையான, உண்மையான வித்தியாசம் உண்டு. பரம்பரையாக இருந்து வந்த தானத்திலும் சேர்த்து வைத்திருப்பதற்கு பிராயசித்தம் என்ற எண்ணம் உண்டு. "சேர்த்து வைப்பது திருட்டுத்தனமே; தானம் வழங்குவது இதற்கு மாற்று" என்ற எண்ணம் பரம்பரையாக வந்த தானத்தின் அடிப்படைக் கருத்து. "தானம்", "பிச்சை" இவ்விரண்டிற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் உண்டு. பிச்சை என்ற சித்தாந்தம்பற்றி நாம் இங்கு ஆராயத் தேவையில்லையாயினும், சந்நியாசிகளுக்கு ஏற்பட்ட இந்த "பிச்சைமுறை" தானம் பெறுவதைவிட மிகச் சிறந்ததாகவும், மேன்மையாகவும் கருதப்பட்டது என்று சொன்னுல் மட்டும் போதும். "பிச்சை" என்று நாம் இன்று சொல்லி, தீனர்களுக்கு, திக்கற்றவர்களுக்கு, ஏழைகளுக்கு வழங்குவது "தானம்" என்ற வகையில் சேராது. பிச்சைக்கும் தானத்திற்கும் உள்ள வித்தியாசத்தை சமூகம் நன்கு அறிந்து கொள்ளுகிறது.

*தானம் மக்களை அடக்கவில்லை*

தானம் பெறுகிறவன் நன்றி என்ற சுமையில் அமுக்கப்படுகிருன் என்று கருதுபவர்கள் சமூகத்தின் தானத்

தின் பலாபலன்களை ஆழ்ந்து, நுட்பமாக அறிய அக்கறை கொள்ளுவதில்லை. ஹிந்து சமூகத்தில் பிராம்மணர்களுக்கு தானம் வழங்கப்பட்டு வந்தது. தானம்பெற்றதினால் பிராம்மண ஜாதி தலைவணங்கவில்லை என்பது நாம் அறிவோம். தானம் பெறுவதோடு, தானம் பூர்த்தியாக தக்ஷிணையும் வசூலித்ததோடல்லாமல் தானம் செய்யும் எஜமானன் ஏதாவது சிறிது தவறு செய்தாலும் அவனிடம் கோபப்பட்டு சாபம் கொடுக்கவும் தயாராக இருந்தது. தானம் கொடுப்பவனே மிகவும் வணக்கமாகவும், அதிக சங்கோசத்துடனும், தூய்மையான சிறந்த எண்ணங்களுடன் தானம் வழங்கிவந்தான். தான் கொடுக்கும் தானப் பொருள் மிகக் குறைவு என்றும் அதன் மதிப்பு மிகக் குறைவு என்றும் எண்ணி சங்கோசப்படுவான். எனவே அஞ்சி அஞ்சி அவன் தானம் அளிப்பான். சாந்தோக்ய உபநிஷத்தில் "செல்வத்துடன் தானமிடு, பயந்து தானம் அளி, சிரத்தையுடன் கொடு" என்றெல்லாம் சொல்லப் படுகிறது. தானம் கொடுப்பதில் கொடுக்கும் முறை அழகாகவும், (Grace), தன் தானத்தின் மதிப்பு மிகக் குறைவு என்ற எண்ணமும், தானம் பெறுபவர் மதிப்புக் குத்தக்கதாகவும் தானம் இருப்பது அவசியம். தானத்தில் "ஸ்ரீயாதேயம்" என்ற ஸ்ரீயில் ஆங்கில Grace என்பதின் கருத்து அமைந்திருக்கிறது. கொடுப்பவனுக்கு இவ்வளவு கடுமையான நியதிகளும், அதேபோல் வாங்கிக் கொள்கிறவனுக்கும் சில முறைகளும் ஏற்பட்டிருந்தன. அப்படியிருந்தும் பிராம்மண சமூகம் அடங்கி இருக்காமல் கர்வமுள்ளதாகவும், பிறருக்குக் கீழ்படியாமலும், தன்னிஷ்

டப்படி நடப்பதாகவும் இருந்ததை நாம் கண்டோம். இச் சமூகம் வீழ்ச்சியடைந்தது. இந்த சமூகம் உபயோகமான பொருள்களையும், செல்வத்தையும் தானமாக வாங்கிக் கொண்ட காரணத்தால் பிறறை அண்டிப் பிழைப்பதாக ஆகிவிட்டது. நிலம் தானமாக பெற்றபின்பும் தாளுக நேரிடையாக உற்பத்தி செய்யவில்லை. இக்குறையின் காரணமாக சமூகத்தில் அவர்களுடைய மதிப்பு அழிந்து விட்டது; இது முற்றிலும் நியாயமே.

### *விநோபாவின் "தானம்"—அதன் கருத்து*

ஆனால் விநோபாவின் இந்த தானத்தில் அன்ன தானமோ, பொருள்தானமோ சேரவில்லை. உற்பத்திச் சாதனங்களும் உ ற் ப த் தி யி ன் உபகரணங்களும்தான் இந்த தானத்தில் இ ரு க் கி ற து. பழங்காலத்து தான முறையில் இருந்த எண்ணமே இந்த பூமிதான அடிப்படை யிலும் இருக்கிறது என்று ஒப்புக்கொண்டபோதிலும் அதற்கும் இதற்கும் வடதுருவம் தென்துருவம் என்ற வித்தியாஸம் இருக்கிறது என்பதை உணர முடியும். ஏனெனில் இந்த தானம் உற்பத்தி சாதனங்களின் தான மேயன்றி உபயோகப் பொருள்கள் தானமில்லை. இதில் பரம்பரை தானத்தின் பெருமைகள் எல்லாம் இருப்பது டன், அதில் இருந்த குறைகள் ஒன்றும் இல்லை என்பது முக்கிய அம்சம்.

### *புரட்சிப் பாதையில்*

பரம்பரை தானத்திலும், பூமி தானத்திலும் மற்றொரு அடிப்படை வேற்றுமை உண்டு. தனிப்பட்டவர் புண்ணி

யம் அடைவதற்கும், செல்வம் பெருமை முதலியவைகளை எதிர்பார்த்தும் பரம்பரை தானம் வழங்கப்பட்டது. இந்த உலகத்தில் பிராம்மணர்களுக்கோ, மற்ற நல்ல மனிதர்களுக்கோ கொடுக்கும் தானத்திற்கு பதிலாக நமக்கு ஸ்வர்க லோகத்திலோ, அடுத்த ஜன்மத்திலோ பெருஞ் செல்வம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே அந்த தானம் வழங்கப்பட்டது. இவ்வுலகில் ஒரு பசுமாடு தானம் செய்தால், ஸ்வர்க லோகத்தில் சாக்ஷாத் காம தேனுவின் குறைவில்லாத சுகமூட்டும் பால் நமக்குக் கிடைக்கும் என்பதே எண்ணம். இங்கு சிறிது நிலதானம் செய்தால் அடுத்த ஜன்மத்தில் பூலோகம் முழுவதிலும் அரசுசெலுத்தலாம் என்ற நம்பிக்கை. ஆனால் விநோபாவின் தானமுறை அதிகச் செல்வம் பெறுவதற்காக இல்லாமல் கிடைத்தசெல்வத்தையும் உடனடியாக விட்டு விடுவதற்காகவே வழி செய்கிறது; எனவே, விநோபாவின் தானமுறை பொருளாதாரப் புரட்சிப்பாதையில் முதற்படியாகும்.

"நாம் யாரிடம் எந்தப்பொருளை தானமாகப் பெற்றாலும் அந்தப் பொருளின் மேல் தானம் கொடுத்தவன் உரிமையை நாம் ஏற்றுக்கொள்வதாக இருக்கிறது என்ற ஆக்ஷேபனை சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையான நிலை வேறு. யாரிடமிருந்து நாம் தானம் வாங்குகிறோமோ அவர்கள் அப்பொருளுக்கு எஜமானர்கள் அல்ல, அப்பொருள்களை அபகரித்தவர்கள்! அபகரித்தவர்களை உரிமையாளர்கள் என்று கருதுவானேன் ?

இந்த ஆக்ஷேபணையின் கருத்தை ஏற்றுக்கொள்ள லாமெனினும், நம்பொருளை ஒருவர் தான் இஷ்டப்பட்டுத் திருப்பிக்கொடுத்துவிடுகிறார் என்ற காரணத்தால் பொருள் கொடுத்தவர் பொருளுக்கு உடமையாளர் ஆகி விட முடியுமா என்பது கேள்வி. நம் பொருளை ஒருவர் பிடுங்கிக்கொண்டார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு புத்திமதி சொல்லி நம் பொருளை திருப்பிவாங்க முயற்சி செய்கிறோம். அவரை மிரட்டாமல், பயமுறுத்தா மல், இம்முறையால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை நன்கு எடுத்துக்காட்டி அன்பான வழியில் திருப்பி சண்டை சச்சரவுகளைத் தவிர்க்க முயற்சி செய்கிறோம். நம்கருத்தை ஏற்று அவர் நம் பொருளைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் நமக்கு என்ன ஆக்ஷேபணை? புரட்சி என்றால் அடிதடி யும், பலாத்காரமாக பிடுங்குவதும்தான் அவசியமா? பலாத்காரம் இல்லாமல் புரட்சி இல்லை என்று நினைப்பவர் கள் பலாத்காரம் தவிர்க்கமுடியாதது என்று மட்டும் கருது வதோடல்லாமல் அது அவசியத் தேவையென்றும் நினைத்து விடுகிறார்கள். பலாத்காரம் எவ்வளவு பெரு குமோ அவ்வளவு புரட்சியும் வெற்றிபெறும் என்பதுதான் அதன் பொருளாகும். இந்தக் கொள்கை தவறானது. அஹிம்சையை கடைப்பிடிக்காத புரட்சிக்காரர்களும் இந் தக் கொள்கையை ஒருபொழுதும் ஏற்கமாட்டார்கள். நம் பொருளை ஒருவன் நல்ல மனதுடன், நேர்மையுடனும் பண்புடனும் திருப்பிக் கொடுப்பானானால் இதில் அவனுக் குப் பெருமையும் நமக்கு கௌரவமும் உண்டு. புரட்சிக்

காரர்களும் சில சமயம் பழய கோட்பாடுகளுக்கு அடிமை யாகவும், உளுத்துப்போன உதவாத கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். சண்டை சச் சரவு இல்லாமல், மக்களிடையே சமரசமாக, பரஸ்பர சம்ம தத்தின்மேல் சமூக நிலை மாறுவது புரட்சி இல்லை என்று நினைப்பவர் பழங்கால வைதீகப் புரட்சிக்காரர் எனலாம். புரட்சியின் பெருமை சமூக மாறுதலில் காணவேண்டுமே யல்லாது சண்டை சச்சரவுகளிலோ, ரத்தம் சிந்துவதிலோ காணமுடியாது.

இந்நாட்டு சமஸ்தானாதிபதிகள், மன்னர்கள் அனைவ ரும் சண்டை சச்சரவு இல்லாமல் தங்கள் சமஸ்தானத் தைக் கொடுத்துவிட்டார்கள். இதனால் நாட்டிற்கு நஷ் டமா? உங்கள் ராஜ்யத்தை உங்களிடமிருந்து பலவந்த மாகப் பிடுங்காதவரையில் எமது லக்ஷியம் பூர்த்தியாக வில்லை என்று சொல்லாமா? இந்த ராஜ்யங்களை நாம் மன்னர்களிடமிருந்து இனாமாகவோ, பிச்சையாகவோ பெறவில்லை. அவர்கள் காலப் போக்கையும், நம் சாமர்த் தியத்தையும் நன்கு உணர்ந்து தன் உடமையை விட்டு விட்டார்கள்.

*தானம் என்பதே தான—மனோபாவம்*

இன்று சொத்துடையவர்களை சொத்தின் உடமை யாளி என்று நாம் கருதவில்லை. ஆனால் செல்வமும் சொத்தும் அவர் அதிகாரத்தில் இருக்கிறது என்பது தான் தற்போதய நிலை. அந்த அதிகாரத்தை, உடமை யைவிட்டு விட வேண்டுமென்று நாம் கோருகிறோம். நம் புத்திமதிக்கும், உபதேசத்திற்கும் செவி சாய்க்க அவர்

கள் நம் கருத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால் இந்த அள வில் நம் புரட்சியில் குறை என்ன ஏற்படுகிறது? முற் றத்து வேம்பே மருந்தாகுமானுல் காட்டில் கல்லிலும் முள் ளிலும் அலேவது புத்திசாலித்தனமா? செல்வத்தைப் பிடுங்குவது புரட்சியின் லக்ஷியமா அல்லது செல்வத்தின் உடமையை விடுவது லக்ஷியமா? பலாத்காரமாகப் பிடுங் குவதற்குப் பதிலாக, தாளுகவே இஷ்டப்பட்டு, தியாகம் அர்ப்பணம் என்ற வகையில் சொத்துடமை மனப்பூர்வ மாக விடப்படுகிறது என்ருல் அப்புரட்சியில் குறை ஏது? இந்நிலேயில் சொத்தைப் பிடுங்கவேண்டும் என்று கட்டா யப்படுத்துவது நம் கருத்தின் சம்சயத்திற்கு அடையாள மாகும். திறமையற்ற காரணத்தாலும், வலிவிழந்த கார ணத்தாலும், நாம் தான முறையைக் கடைப்பிடிப்போமா மாளுல் நம் செயல் புரட்சிக்கு மாருகவே அமைந்துவிடும் என்பது உண்மை. ஆளுல் நம் வலிமையையும், காலத் தின் கோரிக்கையையும் உணர்ந்து சொத்துடையவர்கள் தன் சொத்தை சமூகத்திற்கு அளிப்பார்களாளுல் சொத்தை அடையும் சமூகம், சொத்தை தானமாக அளிக் கும் செல்வவந்தரும் இருவரும் பாக்கியசாலிகளாகிருர் கள். இப்படிப்பட்ட "தானம்" கொடுப்பது என்பது ஒரு காரியமுறையே. இந்த முறையில் கொடுத்தவர், வாங்கி னவர் என்ற பாகுபாடு இல்லே. தானம் வாங்கினவரின் மதிப்புக் குறைவதில்லே. சமநிலேயில் உள்ள இரு நபர் ஒருவர் மற்றவர் உபயோகத்திற்காக ஏதாவது பொருளேக் கொடுத்தாலும், வாங்கிளுலும் இருவரும் நன்றியுள்ளவர்க ளாக ஆகுகிருர்கள்; கடமைப்பட்டவர்களாகுகிருர்கள்.

வினோபாவின் இந்த தான தீக்ஷை இருதரப்பாரையும் கடமைப்பட்டவர்களாக ஆக்குகிறது. இந்த தானம் உண்மையில் தானமனோபாவமே.

*பழயமுறை புரட்சிக்காரர்களுக்குச் சவால்*

இப்படிப்பட்ட புரட்சியில் மற்றொரு முக்கியத்துவமும் உண்டு. இப்புரட்சிக்கு எதிர் புரட்சி ஏற்படுமோ என்ற பயமே இல்லை. சட்ட உதவியால் தனவந்தர்களின் சொத்தைப் பிடுங்குவோமானால் அச்சீமான்கள் மனதில் ஒரு வருத்தம் குடிகொண்டிருக்கும். அவன் மனது உடைந்து ஏதாவது வகையில் பழிவாங்கத் துடித்துக்கொண்டிருப்பான். முடியுமானால் தான் இழந்த சொத்துக்களை மறுபடியும் அடைய வழி செய்வான். எனவே உயர் நீதி மன்றங்களில் வழக்காடி நியாயமற்ற முறையில் தன் சொத்தை எடுத்துக்கொண்டார்கள் என்று நிரூபிப்பான். தன் கட்சிக்குச் சாதகமாக அரசியல் சட்டத்தைக் காட்டுவான். நீதி மன்றத்தில் அவனுக்குச் சாதகமான தீர்ப்பு ஏற்படவில்லையானால் "ஓட்டு" பலம் பெற்று எப்படியாவது அந்த சட்டத்தை ரத்துசெய்ய வழி வகுப்பான்; அல்லது அச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவந்து சட்டத்தை உபயோகமற்றதாகச் செய்ய முயற்சி செய்வான். இந்த வகையில் புரட்சிக்குப் பின் கச்சேரிகளிலும், வழக்காடல்களிலும் புரட்சிக்கு எதிராகப் பழிவாங்க வெகுகாலம் வீணாக விரயமாகுகிறது. ஆயுதம் தாங்கி பலாத்கார புரட்சி நடக்குமிடத்திலும் தோற்ற கட்சி பழிவாங்குவதற்கு முனைந்து நிற்கிறது; தன் ஆயுத பலத்தையும், படைபலத்

தையும் சேகரித்து விஸ்தரிக்க முயற்சி செய்கிறது. இந் நிலையில் புரட்சிக் கட்சியின் நேரமெல்லாம் எதிர்கட்சியின் ஆட்களைத் தேடிப்பிடிப்பதிலும், அவர்களை அடக்கிவைப்ப திலுமான முயற்சிகளிலேயே கழிந்துவிடுகிறது. பழிவாங் கும் நோக்கமே இல்லாததோ, குறைந்த அளவில் இப்பழி வாங்கும் எண்ணம் உள்ளதோ வான பெரியதொரு புரட்சி முறையை உலகில் உள்ள பரம்பரைப் புரட்சிக்காரர்கள் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. பூமிதானப் புரட்சியின் மூலம் எதிர் புரட்சி என்ற பயமே இல்லாத ஒரு புதிய புரட்சி முறையை விநோபா ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த முறை பழயமுறை புரட்சி அன்பர்களுக்கு ஒரு சவால்தானே ?

*இன்று தான முகூர்த்தம், நாளை சம்பத்து தியாகம்*

நாட்டில் சீமான்கள் இருவகைப்படுவர், சிலர் பெரிய முதலாளி, சிலர் சிறிய முதலாளி; பெரிய முதலாளியைப் பணக்காரர் என்கிறோம். சிறிய முதலாளி ஏழை என கரு தப்படுகிறார். எனினும் இச்சிறிய முதலாளியும் உற்பத்தி சாதனங்களின் உடமையாளர்தான். பெரிய முதலாளிக் கும், சிறிய முதலாளிக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. பெரிய முதலாளிகள் லாப மனப்பான்மை கொண்டு மற்ற வர் உழைப்பின் பலனை லாபமடைந்து தன் செல்வத் தைப் பெருக்கிக்கொள்கிறார்கள். ஆகையால்தான் பெரிய முதலாளிகள் தானம் வழங்க வேண்டும் என்று கோரப் படுகிறார்கள். பூமிதான யக்ஞ இயக்கம் தானம் வாங்கும் சங்கமல்ல வென்றும் அது தானம் வழங்கும் முறை மட்

டுமே என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். இன்று தானம் கொடுக்க ஆரம்பிக்கும் முகூர்த்தம். ஆனால் இந்தக் கொடை என்பது எல்லா சொத்துடைமையும் விட்டு விடும்வரையில் நிரந்தரமாக நடந்து வரும்.

இந்த தானம் வழங்கும் காலமும் மிகச் சொற்பமாக இருக்கிறது. முற்காலத்தில் அரசர் மாளிகைகளில் தானம் வழங்குவது 1¼ ஜாமம்தான். (3¾ மணி). இந்த ஒன்றேகால் ஜாமம் என்பது ஒரு குறிப்புத்தான். இதன் லக்ஷியம் என்னவென்றால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ தானம் வழங்கப்படவேண்டும் என்பதே. எனவே, எவ்வளவு விரைவில் நாம் சொத்துடைமையை விட்டு விடமுடியுமோ அவ்வளவு விரைவில் நாம் நம் நாட்டையும், அகில உலகத்தையும் வருங்கால ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும். சொத்துடைமை விட்டுவிடுவது என்ற இந்த தானம் பணிவுடனும், அன்புடனும், மனப்பூர்வமாகவும், புத்திபூர்வமாகவும் இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் நாம் எதிர்பார்க்கும் நற்பலனை அடைய முடியும். இதில் எந்தவிதமான சந்தேகமோ, அசிரத்தையோ கூடாது. தானம் கேட்பவரை ஏதோ தட்டிக்கழித்து விடலாமென்று நினைத்து, தானம் கொடுப்பதால் இரண்டு மடங்கு ஆபத்து ஏற்படக்கூடும், கொடுப்பவர் மதிப்பு குன்றிவிடுகிறது; வாங்கிக்கொள்பவர் மனதிலே ஏற்கனவே இருக்கும் தாபம் குறையாமல் வளர்ந்து விடுகிறது. விநோபா நம் நாட்டில் ஏற்படுத்த விரும்பும் "சமூக அமைதி" தடைபட்டு விடக்கூடும். பெருந்தீங்கு ஏற்படக்கூடும். எனவே அமைதியான [illegible]

மாக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் நம் நாட்டுச் சீமான்கள் தன் சொத்துடைமையை விட்டுக்கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கோருகிறோம்.

*தினை விதைத்தவன் தினை அறுப்பான்*

தார்மீக அரங்கில் தானம் செய்வதைப்பற்றி நமக்கு அனுபவம் உண்டு. அற்பமான பொருளையும், மோசமான பொருளையும் தானம் செய்து அதற்குப் பதிலாக மேலான பலனை எதிர்பார்க்கிறோம். செல்லாத காசுகளை பொறுக்கி யெடுத்து கோவில் உண்டியலில் போட்டு இந்த திரவ்விய தானத்திற்கு பதிலாக நல்ல புண்ணியம் வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். கடவுள் பார்க்க முடியாதவர்! நாமும் கடவுளை பார்ப்பதில்லை! எனவே அவரிடம் இந்த ஏமாற்றம் பலிக்கலாம்! ஆனால் இந்த விழித்த உலகில் எல்லாம் ரொக்க வியாபாரம்தானே. இங்கே வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்ற முதுமொழி உண்மையாகிறது.

*கூட்டுறவு உற்பத்தி எண்ணம்*

ஏழைகளில் இரண்டு வகை. சிறிய சிறிய முதலாளிகள் ஒருவகை, கூலிவேலை செய்து பிழைப்பவர் மற்றொருவகை. சொத்துடைமையை விட்டுவிட முதலில் விரும்புவதால் தானம் என்ற முறையில் ஆரம்பிக்கிறோம். சொத்துடைமை விட்டு விடுவது என்ற நோக்கம் 'சொந்த லாபம்' அடைவது என்ற எண்ணத்தை அழித்து விடுகிறது. சொத்திலே சொந்தலாபம் என்ற எண்ணம் இல்லை

யாஞல் விஷக்கொடுக்கு நீங்கிவிடுகிறது. லாப எண்ணம் அழிந்த பின்பு சொத்துடைமை என்ற எண்ணமும் அழிய வேண்டும். உற்பத்தி என்பது லாபத்திற்காக இல்லாமல் தேவைக்காகவே என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டால் சிறிய சிறிய சொத்துடைமையைக் காப்பாற்றிவைக்க வேண்டும் என்ற போக்கு தாஞகவே அழிந்துவிடும். தன் சொத்துடைமை தன் வாழ்விற்குப் போதுமானது இல்லை என்பது சிறிய முதலாளிகளுக்குத் தெரிநது விட்டால், அவர்கள் தங்கள் சொத்துடைமைகளை எல்லாம் ஒன்ருகச்சேர்த்துக் கொள்ளும் எண்ணம் ஏற்பட்டு அதன் மூலம் கூட்டுறவு உற்பத்தி எண்ணம் தோன்றும்.

## யக்ஞ முறை

ஏழை மக்களிடையே தங்கள் தங்கள் சுயகலத்திற்கான பொருமைகள், சச்சரவுகள் ஏற்படாமல் இருக்க நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். ஒருவனிடம் மூன்று ஏக்கர் நிலம், மற்றவனிடம் ஒரு ஏக்கர், மூன்ருமவனிடம் நிலமே இல்லை என்ற நிலை இருக்கலாம். இவர்களில் யாரும் நன்கு வாழமுடியாது. அவர்கள் மூவரும் கூடி சொத்தெல்லாம் நம் மூவருக்கும் பொதுவென்று நிச்சயித்தால் அவர்கள் சொத்து எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து விடுகிறது. இதற்காகத் தனிப்பட்டவர் தன் சொத்துரிமையை விட்டுவிட நேரிடுகிறது. இதைத்தான் 'யக்ஞம்' என்று சொல்லுகிரேம்.

நாம் பெரிய பெரிய சொத்தைப் பகிர்ந்து எல்லோரையும் முதலாளியாக ஆக்க விரும்புகிரேம். இது தான

முறை. இம்முறையில் பெரிய முதலாளிகளுக்குப் பதிலாகப் பல சிறிய முதலாளிகளை ஏற்படுத்துவது நமது நோக்கமல்ல. சொத்துரிமையைப் பிரிப்பது என்பது முதல் படி. இது நமது இறுதி லக்ஷியமல்ல. இது நமது குடைபோலாகும்; கூரையல்ல. சொத்துரிமையையே நாம் அழிக்க விரும்புகிறோம். ஆகையால்தான் சிறிய சிறிய முதலாளிகளிடம் தங்கள் தங்கள் சொத்தை ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறோம். பெரிய சொத்துக்களை பிரித்துக் கொடுக்க "தானமும்", சிறிய சொத்துக்களை ஒன்றாகச் சேர்த்துக்கொள்ள "யக்ஞமும்" ஏற்பட்டிருக்கின்றன.

### சிறந்த புரட்சி முறை

இப்புரட்சி முறையில் சிறந்த அனுகூலங்கள் உண்டு. இதில் வகுப்புக்கலகங்களில்லாமல் வர்க்க பேதம் நிச்சயமாக அழிந்து விடுகிறது; எதிர் புரட்சி ஏற்படாத வண்ணம் காப்பாற்றும் திட்டம் இதில் இருக்கிறது; விவசாயி-விவசாயியையும், விவசாயி - தொழிலாளி ஆகியவர்களிடையே கலகத்தைத் தவிர்க்க விவேக பூர்வமான சிறந்த முறையாக இது அமைந்திருக்கிறது. அபூர்வமான முறையில் புரட்சியை ஏற்படுத்த ஓர் பெரிய சாதனமாகவும், திடமான நம்பிக்கை கொண்டதுமான இயக்கமே இது.

### வர்க்கபேதம் அழிக்கும் முறை

நம் நாட்டில் பல வர்க்கங்கள் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஒவ்வொரு வர்க்கத்திலும் தனி நபர் மாறுகிறார்கள், மாற்ற முடியும்; என்றாலும் வர்க்

கமேயில்லை என்று சொல்லுவது யுக்திபூர்வமானதாகாது. தனிநபர் மாறும் சமூகத்தை "வர்க்கம்" என்றும் அப்படி மாருமல் இருந்தால் அதை "ஜாதி" என்றும் சொல்ல லாம். ஜாதி பிறப்பை அடிப்படையாகக் கொண்டது, எனவே பிறப்பு நிலையில் மாறுதல் செய்யாதவரையில் அதாவது ஒரே ஜாதியில் மணம் செய்து கொள்வது தவறு என்று நிச்சயப்படுத்தாதவரையில் ஜாதிபேதம் அழிப்பது என்பது கைகூடாது. வர்க்கத்தைப்பற்றி இது பொருந்தாது. இன்றைய சீமான் நாளை ஏழையாகி விடுகி ருன்; இன்றைய ஏழை நாளை சீமான் ஆகிவிடுகிருன். இதில் கடமைக்கும் செயலுக்கும் வழியிருக்கிறதாயினும் சமூக முறையின் காரணத்தால் ஓர் எல்லை ஏற்பட்டிருக்கி றது. உண்மையில் எல்லாருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. பணக்காரன் வயிற்றில் பிறந்தவனுக்கு இயற்கையாகவே சமூக மதிப்பு, குடும்ப சுகம், வாய்ப்பு முதலியன தான் முயற்சி செய்யாமலேயே வலுவில் வந்து கிடைக்கிறது. சம்பத்தும், தரித்திரமும் தனி நபருக்குத் தலைமுறையாக வந்து சேருகிறது.

*வர்க்கபேதம் அழியாமல் சமத்துவ யோகம் ஏற்படாது*

சமூகத்தில் உற்பத்தித் தொழில் செய்யாமல் இருப்ப வருக்கு மதிப்பு உயருகிறது. பரம்பரையாக வந்த நிலை யிலே அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. சமூக சேவை யும் ஒரு தொழிலாக ஆகிவிடுகிறது. சேவையும் பண்பும் வியாபாரப் பொருள்களாக ஆகிவிடுகின்றன. பணக்கா ரத் தனமும் ஏழ்மையும் தனிப்பட்டவர் திறமையைப்

பொருத்ததாக அமைவதில்லை. தனக்குக் கிடைத்த சாதனங்கள், வாய்ப்புக்கள் ஆகியவைகளைப் பொருத்ததாகவே அமைகிறது. இந்த சாதனங்களும், வாய்ப்புகளும் குறிப்பிட்ட சமூக நிலையின் காரணமாக ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் மக்களுக்கே கிடைக்கின்றன. குறிப்பிட்ட பொருளாதார முறையின் காரணமாக பரம்பரையாகத் தனி நபருக்குக் கிடைக்கும் ஒரு நிலையே பொருளாதார ஏற்ற தாழ்வின் அடிப்படை. தனி நபருக்கோ, தனி சமுதாயத் திற்கோ லாபம் என்ற முறையில் ஏற்படும் தொழில் பாபம் என்று கருதப்படவேண்டும். உற்பத்தியில்லாத தொழில் தனிப்பட்டவர் லாபத்திற்காகவே செய்யப்படுமானால் அதைக் கொடிய பாபமாகக் கருதவேண்டும். இம்மாதிரித் தொழில்கள் குறிப்பிட்ட சமூக நிலையைப் பொருத்திருக்கின்றன. எனவே இத்தொழில் புரிபவர்களின் தனி வர்க்கம் ஏற்படுகிறது. ஆகையால் வர்க்க பேதம் அழியாமல் சமத்துவம் ஏற்பட முடியாது.

### நன்மை தீமை என்ற பாகுபாடு ஆபத்தானது

அறிவாளி—முட்டாள், நல்லவன்–கெட்டவன் என்று பாகுபாடு செய்வது தவறான முறையாவதோடு ஆபத்தான நிலையுமாகும். நன்மை தீமை என்பன குணங்கள். வெளிச் சாதனங்கள், தொழில்கள் ஆகியவைகளில் இதன் தொடர்பு மிகக் குறைவு. தொழில் காரணமாக சில வேளை சமூக எதிரியாகும் நிலை ஏற்படுகிறது. இதனால் தொழிலுக்கே இழுக்கு ஏற்படுகிறது. ஆனால் தொழில் காரணமாக ஏற்பட்ட நல்ல மனிதத்தனமும், கெட்ட மனிதத்தன

மும் கண்டு அந்த அடிப்படையில் தனி மனிதன் நல்லவன் கெட்டவன் என்று கருதக்கூடாது. கசாப்புக்கடை வைத்திருப்பவனும் நல்ல மனதுள்ளவனுய், இரக்கமுள்ளவனுக இருக்கமுடியும். கொலைதண்டனையை நிறைவேற்றும் கொலைகாரன் அருவருக்கத்தக்கவனுக இருப்பினும் அவனை அயோக்கியன் என்று கருதிவிடமுடியாது. தன்னைச் சாதுவென்றும் நல்லவனென்றும் நினைக்கும் அகங்காரமுடையவனைவிட மட்டமானவன் வேறு யார் இருக்கமுடியும்? சாதாரண நிலையில், விருப்பு வெறுப்பின்றிப் பார்த்தால் சில மனிதரிடம் தீய குணம் குறைவாகவும், சில மனிதரிடம் நல்லகுணம் குறைவாகவும் காணக்கிடைக்கும். சமூகத்தில் நல்லவன், கெட்டவன், படித்தவன், மூடன், கொடையாளி, கஞ்சன் என்பவர்கள் இருக்கிருர்கள். எனினும், நல்ல தனமும் கெட்டதனமும், கெட்டிக்காரத்தனமும் முட்டாள்தனமும் ஆகிய குணங்கள் வெளிச்சாதனங்கள், உபகரணங்களைப் பொருத்திருப்பது மிகக் குறைவு; சமூகத்தில் எல்லா முறைகளும், சட்டதிட்டங்களும் நல்ல குணங்களை வளர்க்கவே ஏற்படுத்துகிரேம். எனவே நல்லவன் கெட்டவன், கெட்டிக்காரன் முட்டாள், என்று வர்க்கபேதம் செய்வது அர்த்தமற்ற காரியமாகும்.

நல்லவன் கெட்டவன், கெட்டிக்காரன் முட்டாள் ஆகியவர்களிடம் பிரத்தியக்ஷ நடைமுறையில் சுயநலம் குறித்த எதிர்ப்பு ஏற்படுவதில்லை. நல்லவன் தன் நல்ல குணத்தை வளர்க்க, கெட்டவன் தீயகுணத்தை வளர்த்து அதனுல் லாபமடையத் தேவையில்லை. தன் கெட்டிக்கா

ரத் தனத்தைக் காப்பாற்ற மற்றவர்களை முட்டாள்களாகவே வைத்திருக்கத் திட்டம் போட வேண்டியதில்லை.

## பொருளாதார பேதமும், குணங்கள் ஏற்றத்தாழ்வும் போகவேண்டும்

இவ்வகையில் பொருளாதார ஏற்றத் தாழ்விற்கும், குணம் சம்பந்தமான ஏற்றத்தாழ்விற்கும் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வு என்பது குறிப்பிட்ட சமூகமுறை, பரம்பரை வாரிசு, நிலைமை ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டது. குணசம்பந்தமான ஏற்ற தாழ்வை ஆத்ம சக்தியால் அகற்ற முடியும்.

பணக்காரன் ஆவதற்கும் தியாகமும் உழைப்பும் தேவைதான். ஆனால் தனிப்பட்டவர் லாபத்திற்கும், பெருமைக்கும், சுயநலத்திற்கும் மட்டுமே இந்தத் தியாகமும் உழைப்பும் செய்யப்படுகிறது. இதனால் இது சமூக விரோதமாக அமைகிறது. இந்த தபசு அசுர-தபசு ஆகும். ராவணன், இரண்யகசிபு முதலிய அசுரர்கள் இம்முறையிலேயே தபசு செய்தார்கள். ஆகையால்தான் ஒவ்வொரு பிராணியையும் தன்னைப்போலவே கருதுவதற்கு பதிலாக ஒரு பிராணியாலும் தான் சாகக்கூடாது என்று வரம் கேட்டார்கள். அதாவது உலகில் உள்ள எல்லா பிராணிகளும் தன் எதிரி என்பதுதான் இதன் பொருளாயிற்று. மற்றவர்களைத் தன் காலடியில் மிதித்து, தான் மட்டும் வாழ விரும்புபவன் மற்றவர்களைத் தன் விரோதி என்று கருதாமல் வேறு என்ன கருதுவான்? எனவே எல்லோருக்கும் எதிரியானவன் பெருந்தபசு செய்த

பின்பும் அசுர வரத்தையே கடவுளிடம் கேட்கிறான். தன் நாலாபக்கமும் காப்பாற்றுதல், தன்னைக் காப்பாற்றுதல் என்ற எண்ணக்கோட்டை கட்டிக்கொண்டு மற்றவர்களி டத்திலிருந்து தனித்து வாழ்கிறான். மற்றவர்களை எதிரி என்று நினைத்து தனித்து வாழ விரும்புபவன் தன் தனித் தன்மையை அழித்து வாழ்க்கையையே வீணாக்கிக் கொள் கிறான். இவ்வகையில் சேர்த்துவைக்க வேண்டும் என்ற எண்ணம் காரணமாக அசர சம்பத்தின் ஆட்சி ஆரம்பமா கிறது. எனவே ஏழை பணக்காரன் என்ற பேதம் அழி யாமல் மனிதத் தன்மையைக் காப்பாற்றுவது இயலாத காரியம்.

*தானத்திலும் யக்ஞத்திலும் பந்துத்வ மூலமான செயல்*

ஏழை பணக்காரன் என்ற காரணத்தால் ஒருவன் மற்றொருவனிடமிருந்து பிரிந்து விடுகிறான். ஆகையால் தான் ஏழை பணக்காரன் என்ற முறையை அழிக்க விரும் புகிறோம். ஏழை பணக்காரத் தன்மை என்பதை அழிக் கும் முறையும் மனிதத் தனம், பந்துத்வம் ஆகியவைகளை வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது வெளிப் படை. வினோபாவின் தான - யக்ஞ - முறையில் இந்த குணம் இருக்கிறது. பந்துத்வம் என்ற முறையில் ஏற்பட விருக்கும் பொருளாதாரக் கட்டுக்கோப்பில் சம்பத்து, நிலம் ஆகியவைகளை பிரித்துக் கொடுக்கும் செயலும் பந்துத்வ மூலமாகவே இருக்க வேண்டும். அப்போது தான் அந்த சம்பத்து பொதுஜன சம்பத்தாகவோ அகில மனித சம்பத்தாகவோ ஆகும்.

அசுர சம்பத்து எஜமானன் என்ற எண்ணத்தின் ஆதாரம் கொண்டது. தெய்வ சம்பத்து இக் கற்பனை யால் கெட்டு விடுகிறது. ஆனால் மனிதப் பண்புக்கு உட லுழைப்பே ஆதாரமாகக் கொள்வதால் அதில் தானம், யக்ஞம் என்ற இருவித நடைமுறை பந்துத்வ தத்துவங் கள் உள்ளன. அசுரர்களுக்கு கள்ளில் போதை ஏற்படும் போது தேவர்களுக்கு அமிர்தத்தில் இனிமை தோன்று கிறது. இனிப்பை உண்ணும்பொழுது வாய் இனித்திருக் கிறது. ஆனால் உழைப்பினால் உற்பத்தி செய்து சம்பா தித்த நம் உணவில் அற்புதமான ருசி உண்டாகிறது. அதில் வாழ்க்கையின் சகல ரசங்களும் பூமி அன்னையின் சம்பூர்ண வாசனையும் நிரம்பி இருக்கிறது.

## புரட்சி வித்து

### ஏழைகளிடம் தானம் கேட்பதேன்?

ஏழைகளிடத்தில் இரக்கமுள்ள, அரசியல் கட்சிக ளிலோ, பொருளாதார முறையிலோ, சம்பந்தமில்லாத சில தடஸ்தமான (நடுநிலைமையிலுள்ள) சமூக ஊழியர்கள் இந்த பூமிதான யக்ஞத்தில் ஏழைகளிடமிருந்தும் தானம் ஏன் வாங்கப்படுகிறது என்று கேட்கிறார்கள். ஏழைகளி டமோ வயிறுவளர்க்கப் போதிய அளவு நிலமில்லாமல் இருக்க அவர்களிடத்தில் நிலம் கேட்பது ஏழையை பரம ஏழையாக ஆக்குவது ஆகாதா? இம்முறையில் என்ன பிரயோசனம் என்று கேட்கிறார்கள்.

மேற்சொன்ன ஆட்சேபணை சரியெனத் தோன்றும். ஆனால் அந்த எண்ணத்தில் பெரியதொரு குறைபாடு இருக்கிறது. முதலாளித்வத்தில் மனிதனை அடிமையாக்கக்கூடிய பெரிய சங்கிலி சொத்துரிமையின் மோகம். தனிப்பட்ட முதலாளிகள் தங்கள் சொத்துக்களைக் காப்பாற்ற காவல்காரர்களையும், இதர ஆட்களையும் நியமித்து அவர்களுக்குச் சம்பளம் கொடுத்துவருகிறார்கள். இந்த வகையில் பெரிய, பெரிய முதலாளிகளுக்குத் தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்படலாம். ஆனால் முதலாளித்வம் என்பதற்கு பாதுகாப்பு அளிக்க இது முறையல்ல. ஆகையால் தான் முதலாளித்வ முறையில் சிறிய சிறிய முதலாளிகளுக்கும் சொத்துரிமை அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சொத்துரிமையின் மோகத்தால்தான் சிறிய முதலாளிகள் முதலாளித்வ பாதுகாப்பாளராக ஆகிவிடுகிறார்கள். இந்தச் சிறிய சொத்துரிமை என்பது ஏழைகளை முதலாளித்வச் சிறையில் தானாகவே இஷ்டப்பட்டு அடைத்து வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு விலங்காகுகிறது. சொத்துரிமை என்ற மோகத்தைவிடாமல் ஏழ்மை என்பதைப் போக்க முடியாது.

ஏழைகளிடம் தானம் கேட்கும் பொழுது சொத்துரிமை மோகம் என்ற விலங்கை உடைத்தெறிய வேண்டும் என்ற சமிக்ஞையை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்கிறோம்.

## சொத்துரிமையை விட்டுவிடும் சமிக்ஞை

சொத்துரிமையை விரும்புவது பொருளாதார ஏற்றத் தாழ்வின் ஆணிவேர். இன்றுள்ள ஏழைதான் பணக்காரனாக விரும்புகிறான். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு அழிய வேண்டும் என்று விரும்புவதில்லை. இதனால்தான் ஏழை மனதில் பணக்காரனைப்பற்றி பேராசையும் வெறுப்பும் ஏற்பட்டிருக்கிறது. அதே சமயம் தன்னைவிட பரம ஏழையிடத்தில் அவனுக்கு இரக்கம் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஏழையும் தனக்குச் செல்வம் வேண்டுமென்று விரும்புகிறானேயல்லாமல் எல்லோருக்கும் சமமாக செல்வம் வேண்டும் என்று அவன் விரும்புகிறதில்லை. அவன் எல்லோர்க்கும் செல்வம் விரும்புவானானால் தன் சொத்துக்களைத் தன்னைவிட ஏழையாய் உள்ள மக்களோடு பிரித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு தன் சிறிய சொத்திலும் கடவுளுக்கு நிவேதனம் என்ற முறையில் ஒரு சிறிய பங்கு சமூகத்திற்குக் கொடுப்பானாகில் தன் அல்ப சொத்தில் சொத்தே இல்லாதவர் சேர்த்துக்கொள்ளும் சமிக்ஞை செய்தவனாவான்.

## ஆணிவேரை வெட்டவேண்டும்

பணம் படைத்தவன் மனதில் மற்றவர்களைக்கண்டு பயமும், அவநம்பிக்கையும் ஏற்படுகிறது. என் உடம்பில் தங்க நகை இருக்குமேயானால் பயமில்லாமல் வழி நடப்பதோ வீட்டில் கவலையற்றுத் தூங்குவதோ இல்லை. மற்றவர்களைக் கண்டு பயமுண்டாகிறது. இவ்வாறு பணக்கா

ர்களுடைய பயத்தை நாம் அறிந்துகொள்ள முடியும். ஆனால் ஏழைகளுக்கு என்ன பயம் ?

என் விலங்கை யாராவது திருடிக் கொள்வானோ, பிடுங்கிக்கொள்வானோ, என் சிறையில் யாராவது கொள்ளையடிப்பானோ என்ற பயம் கைதிக்கு ஏற்படப் போகிறதா என்ன? ஒரு ஏக்கர், அரை ஏக்கர் உள்ள சொத்துரிமைக் காரர்கள் ஏற்கெனவே பசியாகவும், நிர்வாணமாகவும் வாழ்கிறார்கள். அவர்கள் சொத்தை ஒருவன் எடுத்துக் கொண்டாலோ திருடிக்கொண்டாலோ அவர்கள் ஏழைகளுடைய கால், கை விலங்குகளை திருடிக்கொள்வதற்கு ஒப்பாகும். அப்படி இருந்தும் இச்சிறு முதலாளிகள் தங்கள் சொத்துக்களை இழந்து விடுகிறோம் என்று பயப்படுவதாகத் தெரிகிறது. சொத்துரிமையில் மோகத்தை விடும் போதுதான் முதலாளித்வம் என்ற ஆணி வேரில் கோடாலியின் வெட்டு விழ முடியும்.

### *சொத்துரிமையை விட்டுவிடும் செயல்*

என் ஐம்பது ஏக்கர் நிலம் போகும்போது உன் ஐந்து ஏக்கர் நிலம் எங்கிருக்கப் போகிறது, நிலமில்லாதவன் உன் ஐந்து ஏக்கரைப் பிடுங்கிக்கொள்வான் என்று பெரிய முதலாளிகள் தங்களை ஒன்று சேர்த்துக் கொள்ளும் போது சிறிய முதலாளிகளிடம் சொல்வார்கள். சிறிய முதலாளிகள் இந்தப் பேச்சில் ஏமாந்து சொத்துரிமையின் மோகம் காரணமாக முதலாளித்வ வலையில் சிக்கி விடுகிறார்கள். ஆனால் இந்த ஐந்து ஏக்கர் காரர்கள் தங்கள் சொத்துரிமையை விட்டுவிட்டோம் என்று தைர்யமாகச்

சொல்வாரானுல் அச்செயல் முதலாளித்வ வேரை வெட்டினதாகும். சட்டபூர்வமாகவோ, ஆட்சி முறையிலோ சொத்துடமை தேசீயமயமாக்கப்பட்டாலும் சிறிய சிறிய முதலாளிகளின் சொத்துடமைகள் பறிக்கப்பட வேண்டியிருக்கிறது. உற்பத்திச் சாதனங்களில் தனிப்பட்டவர் சொத்துடமையைப் போக்க ஏழையின் சொத்துடமையையும் பிடுங்கவேண்டியிருக்கிறது. அஹிம்சை முறைத் திட்டத்திலும் வெளவாமை என்ற கருத்தை சிறிய, பெரிய முதலாளிகள் இருவருமே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது; எனவே இருவரும் தங்கள் சொத்துடமைகளை விட்டுவிட உள் எண்ணம் வேண்டும். ஏழைகளிடமிருந்து வாங்கும் தானத்தில் இந்த உள் எண்ணம் உருவாகுகிறது. ஏழைகளின் தானம் சொத்துடமையை விட்டுவிடும் காரியத்தின் ஆரம்பமாக அமைகிறது.

## பிணைக்கும் இணைப்பு

சிறிய முதலாளிகள், ஏழைகள் பரம ஏழைகள், கூலிக்காரர்கள் இம் மூவரின் ஒன்றுபட்ட எதிர்ப்பு ஏற்படவேண்டுமானுல் ஒவ்வொருவரும் தன்னைவிட அதிக ஏழையானவனிடம் காரியாம்சத்தில் அனுதாபம் காட்ட வேண்டும். பணக்காரர்களை எதிர்ப்பதினுல் மட்டுமே ஏழைகளிடம் ஒன்றுபட்ட பாவனை ஏற்பட்டுவிடாது. பழிவாங்கும் அமைப்பினுலோ, அல்லது காகிதச் சட்டங்களாலோ ஒற்றுமை ஏற்படாது. இந்த மனேபாவனைக்குப் பிரத்யட்சப் பிரமாணம் தேவை. தானம் என்ற ரூபத்தில் இம்மனேபாவனையை நிரூபிக்க முடியும். எனவே ஏழை

களின் தானம் ஏழைகளையும் கூலிக்காரர்களையும் ஒருவர் மற்றவருடன் பிணைக்கும் இணைப்பாகும்.

*புரட்சிவித்தின் குண தர்மம்*

விவசாயி உணவுதான்யத்தைத் தனியாகவும் விதையைத் தனியாகவும் வைத்துக்கொள்கிறன். உணவுதான்யத்தைவிட விதை அதிக சத்துள்ளதாக இருக்கும். பணக்காரர்களின் தானத்தால் சொத்துப் பிரிவினை ஏற்படும். பணமும் நிலமும் பங்கீடாகி விடும். ஆனால் ஏழைகளின் தானத்தால் சொத்துடமையை விட்டுவிடும் புரட்சி ஏற்படும். ஏழைகளின் தானத்தில் புரட்சி வித்தின் குண தர்மம் இருக்கிறது. எனவே அஹிம்சைப் புரட்சியின் காரியத் திட்டத்தில் ஏழைகளின் முதலாளித்வ மனப்பான்மையை தியாகம் செய்யும் பெருமை அடிப்படையானது.

( Fundamental Inducement )

*அடிப்படைத் தூண்டுகோள்*

ஆயுதப் புரட்சியிலும் புரட்சிக்கார சிப்பாயின் பலம் அவனுடைய உடையிலோ ஆயுதத்திலோ இருப்பதில்லை; அந்த உடைக்குள்ளே ஒளிந்திருக்கும் உள்ளத்தின் துடிப்பிலேயே பலம் இருக்கிறது.

இந்த உள்ளத்துடிப்பை 'உணர்ச்சி' (Emotion) என்று சொல்லலாம். ரஷ்ய சிப்பாய்களின் அஞ்சா நெஞ்சங்கள் புரட்சிக் கோட்டையைக் காப்பாற்றுவதற்கு அவர்களிடமிந்த புரட்சி உணர்ச்சியும், தூண்டுதலுமே காரணம் என்று பொதுஉடமைக்காரர்கள் சொல்லுகின்றனர். உணர்ச்சி எவ்வளவு சுத்தமாகவும் மேன்மையாகவும் இருக்கிறதோ

அவ்வளவு வீரனின் சக்தியும் அபாரமாக இருக்கும். பூதான யக்ஞ இயக்கம் ஒரு புரட்சி இயக்கம். சுரண்டப் பட்டவர், தாழ்த்தப்பட்டவர் ஆகியவர்களின் உற்சாகத் தையும் வீரத்தையும் பெருக்கவல்ல இயக்கம் இது. இது புரட்சிக்கு எதிரியல்ல. ரத்தக்கிளரி, கொடுமை, இரக்க மின்மை ஆகியவைகளுக்கு இவ்வியக்கம் எதிரானது.

### *இது தேசிய மயமாகாதா ?*

பெரிய முதலாளிகள், நிலப்பிரபுக்களுடைய நிலங்களை தேசீய உடமையாக்கி சிறிய விவசாயிகளுக்கும் நிலமற்ற வர்களுக்கும் கொடுக்கவேண்டும். இந்நிலங்களை நஷ்ட ஈடு இல்லாமல் இப்போதிருக்கும் உடமையாளர்களிட மிருந்து ஜப்தி செய்ய வேண்டும். இதில் உண்மைத்தத் துவம் நிலங்களை ஜப்தி செய்வதில் அல்ல. பணக்காரர்க ளிடமிருந்து அரசாங்கம் நிலங்களை நஷ்ட ஈடு இல்லாமல் தன்வசப் படுத்திக் கொள்ளுவதே தத்துவம். அதன் பின் அரசாங்கமே நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண் டும். அரசாங்கத்தின் மூலமாக இம்முறையில் நில விநி யோகமானால் அது தானமேயாகும்; அதை ஏற்றுக் கொள்வதில் ஏழைகளுடைய கௌரவத்திற்குக் குந்தகம் ஏற்படாது என்று அடிக்கடி வாதாடப்படுகிறது.

### *அரசாங்கச் சார்பற்ற தேசீய உடமை*

பூதான யக்ஞ திட்டத்தின் பலன் இதுவல்லாமல் வேறென்ன ? பணக்காரர்களிடமிருந்து வாங்கும் தானத் திற்கு மாருக அவர்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது. நஷ்ட ஈடு இல்லாமல் தானே அவர்களுடை நிலம் அனைத்

துடே விநோபா கேட்கிறார்? இந்த தானம் ஒரு தனி மனிதன் மற்றொரு தனி மனிதனுக்குத் தன் இஷ்டப்படி கொடுப்பதில்லை. அவன் விநோபாவிற்குக் கொடுக்கிறான். விநோபா தனி மனிதனல்ல, 'தரித்திர நாராயணனின்' பிரதிநிதி. அவரும் தன் இஷ்டப்படி தனி ஒரு மனிதனுக்கு நிலம் கொடுப்பதில்லை. எல்லோர் முன்னிலையிலும் நிலமற்றவர்களின் அபிப்பிராயத்திற்கு ஏற்ப நிலம் இல்லாதவர்களுக்கே நிலம் வழங்குகிறார். இது அரசாங்க தேசிய உடமையில்லாமல் வேறென்ன? இதில் வலுக்கட்டாயமில்லை, ஜப்தியில்லை என்பதனால் தேசிய உடமையின் ரூபமும் குணமும் மாறிவிடுமா?

## இது பூமி நிதியா?

கஸ்தூரிபா காந்தி நிதி, காந்தி நினைவு நிதி போல இதுவும் ஒரு நிதி என்றும், அந்த நிதிகளுக்கு ஏற்பட்ட நிலை போல இந்த நிதிக்கும் ஏற்படுமென்றும் சில ஆட்சேபக்காரர்கள் கூறிவிட்டார்கள். இந்த ஆட்சேபனை கடுமையாகச் செய்யப்படாவிட்டால் இதைப்பற்றி கவனிக்க [illegible]

பணமோ, மற்ற உபயோகப் பொருளோ ஒன்று சேர்த்து பாங்கிகளிலோ கடைகளிலோ வைத்துக்கொள்ள முடிவதுபோல் நிலத்தை யாராவது வைத்துக்கொள்ள முடியுமா? நிலத்தை இடம் மாற்றி எடுத்துக்கொண்டு போக முடியுமா? அது இருந்த இடத்திலேயே தான் இருக்கும். நிலம் விநியோகிப்பதில் பாரபட்சம் ஏற்படுமா, என்பதுதான் கேள்வி. நிலம் அனைத்தையும் அரசாங்கம்

தன்வசப் படுத்திக்கொண்டு அதை வினியோகித்தால் தான் இந்தக் கேள்வி எழும். அப்போதும் ஆட்சி செலுத்தும் கூட்டமும் அந்தக் கூட்டத்திற்குள் இருக்கும் அதிகாரக் கும்பலும்தான் நில வினியோகம் செய்யும். இந்த ஆபத்திலிருந்து தப்ப நில வினியோகச் சட்டங்களையும் முறைகளையும் கூடுமானவரை குற்றங்குறையில்லாமல் விநோபா ஏற்படுத்தியிருக்கிறார். அதில் தவறுகள் ஏற்பட்டாலும் பாரபட்சம் இருக்காது.

6

*களர்நிலம் தானத்திற்கு ஆட்சேபனை*

பூமிதான யக்ஞத்தில் கொடுக்கப்படும் நிலங்களில் பெரும்பாலானவை களர் நிலமாகவும், விவசாயத்திற்கு லாயக்கற்றதாகவும் இருக்கிறதென்றும், தானம் கொடுப்பவர்கள் தட்டிக் கழிக்கவும், பொய் கௌரவத்தை சம்பாதிக்கவும் உபயோகமில்லாத நிலங்களை கொடுத்து தனக்குக் கீர்த்தியை சம்பாதித்துக் கொண்டு நமக்கு பலனற்றதாக செய்துவிடுகிறார்கள் என்றும் புகார் சொல்லப் படுகிறது.

*இது உண்மை நிலையில்லை*

இந்த ஆட்சேபனை கேட்பதற்கு சரியாக தோன்றினும் இதில் உண்மையின் அம்சம் மிகக் குறைவு. பீகார் மாகாணத்தில் விநோபாவுக்கு லக்ஷக்கணக்கான ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது எல்லாம் உபயோகமற்ற களர் பூமியா? அதிக லக்ஷம் நிலம் உள்ளவர்கள் இடத்தில்

சிறிது நிலம் களராக இருக்கலாம். இதனால் எல்லா நில மும் களர் பூமி என்று சொல்ல முடியாது. பெரிய பெரிய நில பிரபுக்களைப் போலவே சிறிய விவசாயிகளும் விநோபா வுக்கு நிலம் அளித்திருக்கிறார்கள். இச் சிறிய விவசாயிக ளிடத்தில் அதிக நிலம் இல்லை. அவர்கள் தன்னிடத்தில் இருந்த நல்ல விவசாய நிலங்களையே அளித்திருக்கிறார் கள். தன் நில உடமையில் பாதியும், மூன்றில் ஒரு பங் கும், கால்வாசியும், ஆறில் ஒரு பங்கும் கொடுத்தவர் பலர். பீகாரிலும் மற்ற மாகாணங்களிலும் நாலாயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபாய், ஏக்கர் மதிப்புள்ள நிலங்கள் கிடைத்திருக்கின்றன. உபயோகமற்ற நிலங்கள் அதிக மாக கிடைத்திருக்கின்றன என்பது பூமிதான தொண்டர் களின் அனுபவமில்லை. எனவே களர் நிலமே அதிகமாக பூமிதானத்தில் கிடைக்கிறது என்று சொல்லுவது பெருந் தவறு.

*காரியம் தடைபடுமா?*

பூமிதானத்தில் வாங்கப்படும் இந்த நிலங்கள் முதல் தவணையாக கிடைக்கின்றன என்பதை மறக்கக்கூடாது. 1954-க்குள் நாடு முழுவதிலும் 25 லக்ஷம் ஏக்கர் பெற வேண்டுமென்றும் 1957-க்குள் 5 கோடி ஏக்கர் நிலம் தானமாக சேர்க்கவேண்டுமென்பதும் நமது லக்ஷியம். உத்திர பிரதேசத்தில் 5 லக்ஷம் ஏக்கர் நிலமான நமது லக்ஷியம் பூர்த்தி அடைந்தும் கூட வேலை நிற்கவில்லை. இப்பொழுது அங்கு 1 கோடி ஏக்கர் நமது லக்ஷியமாக இருக்கிறது. பீகார் மாகாணத்திலே ஒவ்வொரு ஜில்லா

லும் மூன்று லக்ஷம் ஏக்கர் நிலம் சேர்க்க வேண்டு
மன்று சங்கல்பம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு
ளா நிலம் எங்கிருந்து கிடைக்கும்? முதல் தவணையில்
பயோகமற்ற களர் நிலம் கிடைத்து இருந்துங்கூட
கோடி ஏக்கர் நிலம் வாங்கும் நமது லக்ஷியம் பூர்த்தி
டையும்வரை பூமிதான வேலை தடைபடாது. அடுத்த
வணையில் நல்ல நிலங்களும் வந்தே சேரும்.

*சொத்து உடமை வெளுவெலத்து விட்டது*

புரட்சி திட்டத்தில் கருத்து மாறுதலும் மன மாறுத
ம் முக்கிய மகத்துவம் வாய்ந்தவை. இந்த உபயோக
ற களர் நிலங்களை இன்றுவரை தன்னிடம் வைத்தி
ந்த பிரபுக்கள் இதைத் தன் சொத்து என்று கருதவில்
யா? ஒவ்வொரு அங்குல நிலத்திற்கு சண்டை, சச்ச
பு செய்ய அவர்கள் முற்படவில்லையா? இன்று காலத்
ன் தேவை அறிந்து அவர்கள் இந்த நிலத்தில் இருந்த
ங்கள் பாத்யதை (உடமை) விட்டுவிட தயாராகிறார்கள்.
தாவது அவர்களிடமிருந்த சொத்துடமை எண்ணம்
ட்டங்கண்டு விட்டது. இவ்வாறு 10, 20, 50, 100
க்கர் களர் நிலங்களையாவது தானமாகக் கொடுத்தவர்கள்
ளைக்கு சட்டம் வரும் பொழுது இந்நிலத்திற்கு நஷ்ட
டு கோரமாட்டார்கள். இந்த கருத்து மாற்றத்தில்
ஷ்ட ஈடு பிரச்சினை தீராவிட்டாலும் இந்த பிரச்சினை சுல
பமாகவாவது ஆகிவிடுகிறது. இம்மாதிரி கொள்கை
மாற்றத்தினாலேயே அவ்வப்பொழுது புரட்சி ஏற்படுகிறது.

காலம் ஏமாற்றமடைய வில்லை

நேரிடையான லாப நஷ்டத்தையே பார்ப்பவர்களுக்கும் எமது வேண்டுகோள்:- தானே விவசாயம் செய்து வரும் சிறிய நிலச் சுவான்தார்கள் தங்களிடமுள்ள நிலத்தையே தானமாகக் கொடுக்கிறார்கள். அவர்களை நாமொன்றும் குற்றம் சொல்ல முடியாது. "எள்ளு இருப்பவன் எள்ளுருண்டைதானே த ர மு டி யு ம். அ வ ன் லட்டு உருண்டை எங்கிருந்து கொண்டுவர முடியும்? அவனுடைய எள்ளுருண்டை நமக்கு லட்டு உருண்டை ஆகும். ஆனால் லட்டு உருண்டை வைத்துக்கொண்டு விநோபாவுக்கு எள்ளு உருண்டை கொடுப்பதனால் விநோபாவிற்கு என்ன நஷ்டம்? காலம் கடத்துவதற்கோ, தற்பெருமைக்காகவோ எப்படிப்பட்ட நிலம் கொடுத்த போதிலும் கூட இதனால் காலம் கழிவதுமில்லை. கௌரவம் நிலைப்பதுமில்லை. ஏழைகள் முடிந்தவரை தங்கள் விவசாய நிலத்தை விநோபாவுக்குத் தானமாக அளிக்கும் பொழுது பணக்காரர்கள் தங்கள் உ ப யோ க ம ற் ற நிலத்தை கொடுத்து தானம் கொடுத்ததைப் போல் பாசாங்கு செய்கிறார்கள் என்று மக்கள் அறிந்து விடுகிறார்கள். இதில் பாபமும் அபகீர்த்தியும்தான் ஏற்படும். தானத்திற்கு தானமும் கொடுத்து அதற்கு மேல் கெட்ட பேரும் வாங்க வேண்டும். பின்னர் கெட்ட பேரை நல்லதாக்க மறுபடியும் நல்ல நிலங்கள் கொடுக்க வேண்டியே வரும். புண்ணிய காரியத்தில் தோல்வியோ, காரிய நஷ்டமோ ஒன்றுமில்லை.

# 7

## நிலம் பெறுவோர் கௌரவம்

பூமிதா யக்ஞ இயக்கத்தில் தானம் அளிப்பவர்களின் மதிப்பு பெருகுகிறது. அவன் நிலம் கொடுப்பதால் மக்களிடையே அவன் பெயர் வருகிறது. அவனை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று சொல்லப்படுகிறது. தான பத்திரம் வாங்கும் தொண்டரையும் நாம் போற்றுகிறோம். அத் தொண்டருக்கும் மதிப்பு ஏற்படுகிறது. இந்த இயக்கம் இவ்விருபாலருக்கும் புருஷார்த்தத்திற்கும் பெருமைக்கும் வாய்ப்பு அளிக்கிறது. ஆனால் நிலம் பெற்றுக் கொள்பவர்கள் தனக்கென்று நிலத்தைச் சேர்த்துக்கொள்வதால் அவனுக்குப் புருஷார்த்தமும் ஏற்படுவதில்லை. கௌரவமும் ஏற்படுவதில்லை, என்று சிலருக்குத் தோன்றலாம்.

### பலப்பிரயோகத்திலும் இதே குறை

இந்த ஆட்சேபனை தர்க்க ரீதியாகவும் உண்மையாகவும் தோன்றுகிறது. ஆனால் ஆழ்ந்து சிந்தனை செய்தால் இதில் உண்மை இல்லை என்பது புலப்படும். பூமிதான யக்ஞ இயக்கத்திற்குப் பதிலாக இரண்டே மாற்றுமுறை கையாளக்கூடும். ஒன்று, ஒருசிலர் ஒன்று சேர்ந்து பலாத்கார முறையிலோ, ஆயுதம் தாங்கியே பெரிய விவசாயிகளிடமிருந்தும் நிலப் பிரபுக்களிடமிருந்தும் நிலத்தைப் பிடுங்கி அதை மிகச் சிறிய விவசாயிகளுக்கும் நில மற்ற தொழிலாளிகளுக்கும் பிரித்துக்கொடுப்பது. ஆனால்

இம்முறையில் நிலமற்ற தொழிலாளியோ, மிகக் குஎ வான நிலமுடைய விவசாயியோ மற்றவர் நிலத்தை அஎ வானே யானுல் அவன் தன் புருஷார்த்தத்தை அடை தற்கு என்ன வழி இருக்கிறது? அவனுக்காக ஒருசி ஒன்று சேர்ந்து பலப் பிரயோகம் செய்தவர்களின் செ வாக்கே உயரும். ஏழைக் குடியானவன் வெறும் நில பெற்றவனுகவே ஆக முடியும்.

*சட்டம் இயற்றும் முறையிலும் இதே குறை*

மற்ருெரு மாற்று முறை, அரசாங்கம் சட்டம் இயர் முதலாளிகள், பெரிய விவசாயிகள் ஆகியவர்களின் அ கப்படி நிலத்தை எடுத்துக்கொண்டு அதை சிறிய விவசா- களுக்கும் விவசாயத் தொழிலாளிகளுக்கும் பங்கிடுவது இவ்வகையிலும் நிலம் பெறுபவர்களுடைய பராக்கிரமத் திற்கு இடம் இல்லே. அரசாங்கம் சட்டத்திஞல் நிலத் தைப் பெற்று அவர்களுக்குக் கொடுக்கும்; எனவே அவ கள் தானம் பெற்றவர்களாகவேதான் இருப்பார்கள்.

*தானம் பெறுபவனுக்குப் பெருமை என்ன?*

பூமிதான யக்ஞ இயக்கத்தில் கூறப்படும் குை நிலத்தைப் பிடுங்குவதிலும், ஜப்தி செய்யும் முறையி இருக்கிறது என்பதே பொருள். அ தா வ து ஏதாவ குறை இருப்பின் அது எல்லா முறையிலும் காணக்கூடிய ஒரேமாதிரிக் குறைதான். பூமிதான இயக்க முறையில் மட்டும் இது தனிப்பட்டக் குறையாகாது. ஆயுதப் பி யோக முறையில் ஜமீன்தார்கள், முதலாளிகளுக்கு மதி

பில்லை, நிலத்தைப் பிடுங்குபவர்களின் மதிப்பே வளர்கிறது. ஆனாலும், நிலத்தை அபகரிப்பவர்கள் சிறிய விவசாயிகள், நிலமற்ற தொழிலாளிகள் ஆகியவர்களின் சீர்திருத்தக் காரர்கள் என்று கருதப்படுவதால் நிலம் பெரும் ஏழைகளின் மதிப்பு எவ்வாறு உயரும் ?

அடிப்படைக் கருத்து வேற்றுமை

இந்த ஆட்சேபணையின் அடிப்படையில் கருத்து வேற்றுமை இருக்கிறது. பறிக்கப்பட்ட உரிமை மறுபடியும் அவனுக்கு கிடைக்கிறது என்பதில்தான் அவனுக்குக் கௌரவம். என் வீட்டில் திருட்டுப்போய், போலீஸ்காரர்கள் உளவரிந்து திருட்டைக் கண்டு பிடித்து என் பொருளை எனக்கு மீட்டிக் கொடுத்தால் இது எனக்கு கௌரவமல்லவா. இதைவிட அதிக கௌரவம் என்ன இருக்க முடியும் ? அல்லது திருடனே நல்லறிவு பெற்று ஊருக்குப்பயந்து, பட்சாத்தாபம் கடமை உணர்ச்சியின் காரணமாகவோ, அல்லது மற்றவர்கள் சொல்லுவதற்கு இணங்கியோ, என் பொருளைத் திருப்பிக் கொடுப்பானேயாகில் எனக்கு இதனால் மதிப்பில்லையா ? கெட்டுப்போன அல்லது பறிக்கப்பட்ட பொருள் உடமைக்காரனுக்கு என்பதே பொருள். பொருள் யாரிடமிருந்தாலும் அவன் விஷயம் உணர்ந்து சண்டைச் சச்சரவு இல்லாமல் அதனை திருப்பிக் கொடுப்பானேயாகில் அவனை நாம் வாழ்த்துவோம். ஒரு குடிகாரன் சட்டம் போடாமலேயோ, கட்டாயப்படுத்தப்படாமலோ, குடியை விட்டுவிடுவானேயானால் அவனுக்கு நாம் சந்தோஷத்தைத் தெரிவிக்க மாட்டோமா ?

## இம்முறையின் பெருமை

பூமிதான யக்ஞ இயக்கத்திலும் இதுவே நடைபெறு கிறது. இத்துடன் இன்னொரு விஷயமும் உண்டு. பரம் பரை சொத்துரிமை முறையின் அடிப்படையில் கிடைத்த செல்வம் நமக்கு உரிமை அற்ற, நியாயமற்ற சொத்து' என்ற குற்றத்தை உணர்ந்து அந்த அநியாயத்தை தவிர்க்க விரும்புகிறான். இந்த மனமாறுதலின் மதிப்பு வரம்பற்றது.

## உழைப்பின் மேன்மை

ஒருவன கிரிகெட்டில நலல ஆட்டக்காரன. மற்ற வன் வீணை வாசிப்பதில் சமர்த்தன். மற்றொருவன் சிறந்த எழுத்தாளன். இவர்களில் ஒவ்வொருவரையும் புகழ வேண்டுமென்றால் எப்படி புகழ்வது? கிரிக்கெட் கார னுக்கு நல்ல மட்டை பரிசளிக்கலாம். வீணை வாசிப்பவ னுக்கு சிறந்த வீணை கொடுக்கலாம். நல்ல எழுத்தாள ருக்கு சிறந்த பேனா அளிக்கலாம். சிவாஜி சிறந்த வீரர். அன்னை பவானி தன் வரப்பிரசாதமாக அவருக்கு பிரசித்தி பெற்ற உடைவாளை அளித்தாள். ஒவ்வொருவனுடைய குணத்திற்கேற்ப, திறமைக்கேற்ப அவனுக்குத் தேவை யான கருவிகளோ, உபகரணங்களோ அளிக்கிறோம். அவனை கௌரவப்படுத்த இதுவே சிறந்த வழி. இதே போல நிலமில்லாமல் இருந்து, ஆனால் நிலத்தை உழுது தன் உழைப்பினால் செல்வத்தை உற்பத்தி செய்பவனுக்கு அவன் உழைப்பிற்கான சாதனத்தைக் கொடுத்து நாம் அவனை கௌரவிக்கிறோம். இதுவே அவனுக்கு நியாய மான மரியாதை.

## நிலப் பொது உடமை

பூமிதான யக்ஞ முறை ஒரு வகையில் நிலங்களை தேசீய உடமையாக்கும் முறைதான் என்று நாம் முன்னர் கூறினோம். "தேசீய உடமை" என்ற வார்த்தையை 'சமூக உடமை' என்ற பொருளில் உபயோகிக்கிறோம். அரசாங்க அதிகாரியோ, அரசாங்க பிரதிநிதி என்ற முறையில், சட்டத்தின் சார்பாக நிலத்தை எடுத்துக்கொண்டால் அந்த நிலம் "அரசாங்க உடமை" ஆகிறது. இந்த முறை "அரசாங்க பிரபுத்வம்" ஆகும், "ஜனபிரபுத்வம்" ஆகாது. "ஜன பிரபுத்வ" முறையில் ஜனங்களின் பிரதிநிதிகள் நிலங்களை வைத்துக் கொள்வார்கள். தன் சொத்துடமையை தியாகம் செய்ய விரும்பும் முதலாளிகளுக்கு அவர்களே பிரதிநிதிகளாக ஆவார்கள், நிலத்தைப் பெற்றுக்கொள்ளும் உழைப்பாளிகளுக்கும் அவர்களே பிரதிநிதிகள் ஆவார்கள். இந்த பிரதிநிதித்வத்திற்கு விநோபா ஒரு சின்னமாக விளங்குகிறார். மக்கள் பிரபுத்வம் ஏற்படுத்தும் இந்த முறை மிக அற்புதமானது, நன்மை பயக்கவல்லது. இதில் கொடுப்பவர், வாங்குபவர் ந பாலரும் பெருமை அடைகிறார்கள்.

## நிலம் பெறுவோருக்கு பொதுஜன மதிப்பு

ஆட்சேபணை சொல்லும் அன்பர்கள் இஷ்டப்பட்டால் ஈகுந்த விழா நடத்தி நிலமற்றவர்களுக்கு வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காயுடன் நிலம் கொடுக்கலாம். இப்படிச் செய்தால் நிலம் பெறுபவர்களுடைய மனத்தில் நன்றி

உணர்ச்சி ஏற்படுவதுடன், சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்படக்கூடிய சூழ்நிலை உண்டாகும்.

8

## பூமிதான யக்ஞம் சத்யாகிரகத்தின் அம்சம்

சத்யாகிரகத்தைப்பற்றி நம் நண்பர்கள் மனதில் பல வித பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்கள் நம்மிடம் சேர்ந்து சர்ச்சை செய்ய அப்பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். பூமிதான யக்ஞ இயக்கமும் சத்யாகிரகத்தின் ஒரு உருவமா என்று ஒரு கேள்வி இப்பொழுது கேட்கப்படுகிறது. இவ்வியக்கத்தின் மூலகர்த்தாவான வினோபா, பூமிதான யக்ஞ இயக்கம், சத்யாகிரகத்தின் பல ரூபங்களில் ஒன்று, என்று சமீபத்தில் கூறி இருக்கின்றனர். எனவே தானமும், யக்ஞமும் ஆன இயக்கம் புரட்சிக்கு போதுமானதாக ஆகாவிட்டால் வினோபா சத்யாகிரகம் செய்வாரா என்று கேட்பவர்களுக்கு பூமிதான யக்ஞமும் சத்யாகிரகத்தின் உருவமே என வினோபா பதில் சொல்லுகிறார்.

சத்யாகிரகத்தைப் பற்றி நம் மனதில் பல தப்பெண்ணங்கள் இருப்பதால் வினோபா சொல்லுவது நமக்கு சரியாக புரிவதில்லை. இதைப்பற்றி சிறிது ஆராய்வது அவசியம்.

### வாழ்க்கை முன்னேற்றமுள்ளது

சத்யாகிரஹம் ஒரு வாழ்க்கைத் தத்துவம். நம்முடைய வாழ்க்கை மாறிக்கொண்டே வருகிறது. அதாவது

அது எப்பொழுதும் முன்னேறி செல்லுகிறது. நிலைத்து நிற்பதில்லை. அதை ஒருவரும் தடுக்க முடியாது. எனவே வாழ்க்கையோடு நேரிடை தொடர்புள்ள தத்துவங்கள் தடைபட்டு நிற்பதில்லை, பூரணத்வம் அடைவதுமில்லை. வாழ்க்கை நின்று விடுமேயானுல் ஒன்று சாவு ஏற்பட வேண்டும் அல்லது முக்தி ஏற்பட வேண்டும். வாழ்க்கை இழந்துவிடுவதை சாவு என்கிரோம். வாழ்வு பூரணத்வம் அடைந்தால் அது முக்தி என்கிரோம். ஆகையினுல் தான் மோக்ஷம் என்பதை அமிருதத்வம் (சாகாமை) என்று சொல்லுகிரோம். சாவிலிருந்து சாகாமையின் பக்கம் செல்வதற்கு முறைப்படியான முயற்சியின் பெயர் சாதனே. ஆகையால் வாழ்க்கை சித்தி அடைந்த ஒரு வஸ்துவோ அலலது தயாரிக்கப்பட்ட ஒரு பொருளோ ஆகாது. நாம் பிறக்கும் பொழுது கூடவே கொஞ்சம் கொண்டுவருகிரோம். பிறகு நாம் மனிதனுவதற்கு நாம் முயற்சி செய்கிரோம். எனவே கொஞ்சம் இருப்பதிலிருந்து இன்னும் மேலும் வளர விரும்புகிரோம். நாம் ஆக விரும்பும் பாதையில் முன்னேறுவதற்கு சாதனே என்று பெயர். அநியாயத்தை எதிர்த்து நிற்கும் அளவில் மனிதன் தன் மனித குணங்களே விஸ்தரிக்கும் பிரயத்தனத்தில்தான் சத்யாகிரகம் கண்டுபிடிக்கப்பட்டது.

## The discovery of Satyagraha

### "சத்யாகிரகத்தின் தோற்றம்"

'கண்டுபிடிப்பது' என்ற வார்த்தை இரண்டு பொருள்களில் உபயோகிக்கப்படுகிறது. இதன் சாதா பொருள்

தேடுவது, பரிசோதனை என்பதாகும். ஆங்கிலத்தில் 'discovery' என்கிறோம். இதர பாஷைகளில் இந்த வார்த்தைக்கு "வெளிப்படுவது", "தோன்றுவது", "உருவகப்படுத்துவது" என்றெல்லாம் பொருள்கள் உண்டு. ஆங்கிலத்தில் 'Discovery' என்பதற்கு "தன்னைத்தான் வெளிப்படுத்துதல்", "தோன்றுதல்" என்னும் பொருள் உண்டு. சத்யாகிரகம் இவ்வார்த்தையின் இரு பொருள்களிலும் அடங்கி இருக்கிறது. சத்யாகிரகம் ஒரு புதிய பரிசோதனை. இதன் மூலமாக நம் வாழ்க்கை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுகிறது.

### "எதிர்ப்பின்" அர்த்தம்

எதிர்ப்பு என்ற வார்த்தையைப் பற்றியும் நாம் நன்கு அறிய வேண்டும். சமஸ்கிருத பாஷையில் "எதிர்ப்பு" प्रतिकार என்றால் பதிலுக்கு ஏதாவது செய்வது என்று அர்த்தம். ஒருவன் நமக்கு உதவி செய்து நாம் அதற்கு பதிலாக அவனுக்கு நன்மை செய்தால் அதுவும் சமஸ்கிருத பாஷையில் प्रतिकार தான் பிரதிகாரம் என்பதின் மூலப் பொருள் விரோதம் மட்டும்தான் என்பதல்ல. பிரதிகாரம் என்பது கூட்டுறவு, எதிர்ப்பு இரண்டுக்கும் பொருந்தும். பிறர் செய்யும் அநியாயத்தையோ, கெட்ட காரியத்தையோ எதிர்க்கும் பொழுது நம்முடைய எதிர்ப்பு உண்மையில் அந்த மனிதனுக்கு ஒத்துழைக்கும் முறையிலேயே இருக்கவேண்டும். எதிர்ப்புக்காட்டும் சத்யாகிரகத்தின் லக்ஷியமும் தூண்டுதலும், ஒத்துழைப்புள்ளதாகவே இருக்கும். பொதுஜன சத்யாகிரக இயக்கத்தை

தோற்றுவித்த ஆதிகுரு காந்திஜீ மிகத்தீவிரமாகவும், நம்பிக்கையுடனும், சத்யாகிரகம் அன்பை அடிப்படையாகக் கொண்டது, தொண்டு மயமானது; எனவே இதில் இரு தரப்பிலும் நன்மை ஏற்படக்கூடிய, இணையற்ற லக்ஷணங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்.

*கூட்டுறவு முறையில் எதிர்ப்பு*

பூமிதான யக்ஞத்தை சத்யாகிரகத்தின் ஒரு உருவமென்று விநோபா ஏன் கூறுகிறார் என்பதை புரிந்து கொள்ளுவதற்கு அறிவாளிக்கு கஷ்டமிராது. தீமையை தவிர்ப்பதற்காகச் செய்யும் காரியங்கள் கூட்டுறவு முறையாக இருந்தபோதிலும் சரி எதிர்ப்பு முறையாக இருந்த போதிலும் சரி, அவை எல்லாம் எதிர்ப்பே. தீமை செய்பவன் தீமையே தன் உடமை என்று நினைக்கும் பொழுது எதிர்ப்புக்கு உதவி செய்வதில்லை. தன் தீமையை ஆமோதித்து அதைக் காப்பாற்றுவதற்கே தன் பலம் முழுவதையும் செலவழிக்கிறான். அப்போர்பட்டவன் தன் எதிரியை ஒரு சத்யாகிரகி என்று நினைத்த போதிலும் அந்த சத்யாகிரகி அவனைத் தன் எதிரி என்று நினைப்பதில்லை. தீங்கு இழைப்பவனும் தன் கூட்டாளியே என்று நினைக்கிறான். சத்யாகிரகியின் எதிர்ப்பு ஒரு பொருளைக் குறித்தோ அல்லது செயலைக்குறித்தோ இருக்குமே அல்லாமல் ஒரு நபரைக் குறித்து இருக்காது.

*சத்யாகிரகத்தின் பெருமை*

இந்த நோக்கில் பூமிதான யக்ஞ இயக்கம் கஷ்ட நிவாரண இயக்கமோ அல்லது துக்க நிவாரண இயக்கமோ

இல்லை. சத்யாக்ரகப் புரட்சி முறையின் ஒரு மாபெரும் அங்கம் இது. இன்றைய பணக்காரன் தன் செல்வமே ஒரு நோய் என்று கருதுவதில்லை. அவன் கெட்டவனல்ல; ஆனால் அவன் தன் (பணம் படைத்த) குறையை உடமை என்று கருதுகிறான். எல்லையற்ற செல்வம் சேர்ப்பதையும் குடும்பத் தலைமையையும் தன் உடமையெனக் கருதுகிறான். ஆகையினால் செழுமை வறுமையைப் போக்குவதற்கு தானாகவே முயன்று ஒத்துழைப்பதில்லை. சங்கோசப் படுகிறான், முன் பின் பார்க்கிறான். அல்லது தட்டிக் கழித்து விடுகிறான். இன்றைய சாவு நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டது என்று எண்ணுகிறான். இந்தக் குறையை நீக்க நாம் நல்ல முறைகளைக் கண்டு பிடித்து அதன் மூலம் அவனுடைய குறையும் நீங்கி மனதும் மாற வழி செய்வதோடு இறுதியில் நம் முறையின் வெற்றியை அவன் தன்னுடைய வெற்றி என்று கருத வேண்டும். சத்யாக்ரக முறையில் ஒருவனுக்கு வெற்றியும் மற்றவனுக்கு தோல்வியும் என்பதல்லாமல் இருதரப்பார்க்கும் வெற்றி ஏற்படுகிறது என்பதே மிக முக்கிய அம்சம். செழுமையையும் ஏழ்மையையும் போக்குவதில் ஏழையின் வெற்றியைத் தன் வெற்றி என்று பணக்காரனும் நினைக்கும் பொழுதே மனமாற்றம் ஏற்பட்டு பணக்காரன் ஏழையின் கூட்டாளியாவான்.

### மனமாற்றத்தின் ஆரம்பம்

நம் மனம் மாறாத வரையில் நம்முடைய எதிர்ப்பு சத்யாக்ரகமாக இருக்க முடியாது. ஏழைகளின் மனம்

மாருமல் அவர்களுடைய சத்யாக்ரகத்தின் பலனுக பணக்காரர்களின் மனம் மாறுதல் ஒரு பொழுதும் ஏற்ப டாது. ஏழைகளின் மனம் மாறுதல் ஏற்படாவிட்டால் ஏழ்மை பணக்காரத்தனம் என்பது ஒரு பொழுதும் முடிவு டையாது. நாம் நமது வறுமையை மட்டும் போக்க விரும் புகிறோமா அல்லது சமூகத்தில் இருக்கும் ஏழ்மை பணக் காரத்தனம் என்ற வித்தியாசத்தை அதாவது பொருளா தார ஏற்றத் தாழ்வைப் போக்க விரும்புகிறோமா என்று நம் மனதைத் தொட்டுப் பார்த்து நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். நம் வறுமையை மட்டும் போக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமேயானால் நம் மனோநிலைக்கும் பணக்காரன் மனோநிலைக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை; அவன் செல்வம் படைத்தவன், நாம் செல்வம் விரும்பு கிறவன். இருவர்களிடத்திலும் பண ஆசையும் லோப மும் சமமாகவே இருக்கின்றன. தான் பணக்காரனுக விரும்புகிறவன் உலகத்தில் மற்றவன் ஏழையாக இருக் கக்கூடாது என்று விரும்புவதில்லை. அவன் விரும்புவ தெல்லாம் தான் ஏழையாக இருக்கக்கூடாது என்பது தான். இப்படிப்பட்ட எண்ணம் புரட்சி முறை அடிப்ப டைக்கு முற்றிலும் மாறுபட்டது. எனவே முதலில் ஏழை களின் மனம் மாறுதல் பணக்காரர்களின் மனம் மாறுவ தற்குஇன்றியமையாத நிபந்தனையாகிறது.

## ஏழைகளின் பொறுப்பு

பூமிதான யக்ஞ இயக்கத்தில் இதற்குத் திட்டம் இருக்கிறது. ஏழைகளிடம் மிகக் குறைந்த சேர்க்கும்

எண்ணமும் குறைந்த சொத்துக்களும் இருப்பினும் மேலும் சேர்த்து வைக்க வேண்டும் என்ற மோஹமும் தன் சொத்துடைமையைப் பெருக்க வேண்டும் என்ற நிரந்தரக் கவலையும் அவர்களிடமும் காண்கிறோம். செழுமை ஏழ்மையைப் போக்குவதில் நமது இலக்குத் தான் என்ன ? புரட்சிக்குப் பின்பும் சமூகத்தில் சில கெட்டவர்கள் இருக்கக் கூடும். ஆனால் நாம் ஏற்படுத்தும் சமூகத்தில் தீமையை உபயோகிக்க குறைந்த பக்ஷ வாய்ப்பு ஏற்படுவதுடன் வறுமை— பெருமைக்கே வழியில்லாமலும் இருக்கும். வர்க்க பேதமற்ற சமூக அமைப்பிற்கு இது முதல் இலக்கு. இப்பேர்ப்பட்ட முறையை ஏற்படுத்தும் விருப்பமும் தேவையும் இன்று பணக்காரர்களைவிட ஏழைக்கு அதிகமாக இருக்கிறபடியால், ஏழை தன் நிலையை மாற்ற விரும்புகிறான், பணக்காரனோ அதை தன்னால் கூடுமானவரையில் இன்றைய முறையை நிலைநிறுத்த விரும்புகிறான். எனவே புரட்சியின் பொறுப்பு ஏழைகளிடமேஇருக்கிறது. அதாவது, சேர்த்துவைத்தல், குடும்பச் சொத்து, தனி உடமை ஆகியவைகளை விட்டு விடும் பாதையில் ஏழைகள் தானேசெய்துகாட்டவேண்டும் என்பதே இதன் பொருள். ஆயினும் மிகக் குறைவாக சேர்த்து வைக்கவேண்டும் என்ற மனப்பான்மை ஏழைகள்விட்டு விடத் தயாராகும் பொழுதுதான் சமூகத்தில் வவ்வாமையின்அடிப்படை ஏற்படும். ஒரு சிலர் முதலாளிகளாகவும், பெருவாரியான மக்கள் உடமையற்ற தொழிலாளிகளாகவும் இல்லாமல் இருக்கக் கூடிய ஒரு

புதிய பொருளாதாரமுறையின் அமைப்பு ஏற்பட வேண்டும் என்ற விருப்பம் அவனுடைய உள்ளத்தில் உதிக்கும்.

### சொத்துடைமையை விட்டுவிடுவது

சொத்துடைமையை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தால் எல்லோரும் சிறு சிறு முதலாளிகள் ஆகிவிடுவார்கள். இதனால் சொத்துரிமையின் தீமை அதிகமாகிவிடும். எனவே சொத்துடைமையை விட்டு விடும் லக்ஷியத்தையே ஏழைகள் கடைப்பிடிக்க வேண்டும். தன்னுடைய சொத்துடைமையை விட்டு விட ஆரம்பிப்பது என்பது இந்தக் கருத்திற்கு அத்தாட்சியாகும்; இந்த மனமாற்றத்தின் நெறி பூமிதான யக்ஞ இயக்கத்தின்மூலம் இன்று ஏழைகளுக்குக் கிடைக்கிறபடியால், "என்னுடைய இயக்கம் பிச்சைக்காரர்களுடைய கூட்டமல்ல. புரட்சி நெறியை அளிக்கும் மாபெரும் மஹோத்ஸவம்," என்று விநோபா சொல்கிறார்.

### பூமிதானம் சத்யாக்கிரகத்தின் உருவே

பூமிதான யக்ஞ இயக்கம் புரட்சி முறையின் ஏற்பாடு, சத்தியாக்கிர எதிர்ப்பு முறையின் சிறந்ததோர் கட்டம். நாட்டின் புரட்சிப் பிரியர்கள், புரட்சி வீரர்கள் ஆகிய அனைவரும் இவ்வியக்கத்தின் பரவலானக் கருத்தைப் புரிந்து கொள்ள முயற்சித்தால் இந்நாட்டில் மனித சமுதாயத்திற்கே ஒரு புது வழியும் நடு நடுங்கும் உலகத்திற்கு ஒரு நம்பிக்கையும் ஏற்படக் கூடிய ஒரு புரட்சியாக இது அமையும்.

*புதுயுகப் பெண்களுக்கு நல்லதொரு வாய்ப்பு*

"தென் ஆப்பிரிக்கா சத்தியாக்கிரகம்" என்ற தம் புத்தகத்தில் சாத்வீக எதிர்ப்பு (Passive resistance) சத்தியாக்கிரகம் இவ்விரண்டின் வித்தியாசத்தை விரிவாக காந்தீஜீ எழுதியிருக்கிறார். சாத்வீக எதிர்ப்பிற்குச் சான்றாக இங்கிலாந்தில் பெண்கள் வாக்குரிமை இயக்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆண்களை விட பெண்கள் எளியவர்களாகவும் நிராயுதபாணிகளாகவும் இருப்பதாலும் ஆயுதங்கள் தாங்கிப் புரட்சி செய்யவோ தோள்வலிமையை உபயோகிக்க முடியாதாகையால் அவர்கள் சாத்வீக எதிர்ப்பைக் கடைப்பிடித்தார்கள். அதாவது ஆயுதபலம் சாத்தியமில்லையானால் ஆயுதமற்ற எதிர்ப்பு சிறந்தது என்றும், கடைப்பிடிக்கக் கூடியது என்றும் கருதப்பட்டது. இந்த முறை ஆயுதப் பிரயோகத்தை விட எளிய முறையாகக் கருதப்பட்டது.

*சம பலமும் சமத் தகுதியும்*

ஆயுதப் பிரயோகத்தை விட சத்தியாக்கிரகம் எளியது என்றில்லாமல் அதை விடச் சிறந்தது என்றும் அதிக உபயோகமானதென்றும் கருதப்படுவதே சத்தியாக்கிரகத்திற்கும் சாத்வீக எதிர்ப்புக்கும் அடிப்படை வேற்றுமை. ஆயுத பலம் படைத்தவனுக்கும் சரி ஆயுத பலம் கிடைக்கக்கூடியவனாக இருந்தாலும்சரி, அல்லது கையில் ஆயுதமற்றவனாக இருந்தாலும் சரி இரு பாலருக்குமே சத்தி

நக்கிரகம் பொருந்தக்கூடியது. ஆயுதம் கிடைப்பது கஷ்டமென்றோ, ஆயுதம் கிடைக்காது என்றோ, ஆயுதம் உபயோகப்படுத்தும் வலிவு இல்லை என்றோ ஒருவன் சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடித்தால் அவன் ஆயுதத்தையே நம்பியிருப்பவனாக ஆகிறான். ஆகையினால் அவனுடைய சத்தியாக்கிரகத்தில பலமோ சாமர்த்தியமோ இருப்பதில்லை. உடலிலும் வாளிலுமே பலம் இருக்கிறது என்று மனிதனுக்குப் பிரமை ஏற்பட்டிருக்கின்றது. ஆண்களைவிட பெண்களுடைய மனதில் இந்தப் பிரமை அதிகமாகக் காணப்படுகிறது. இதனால்தான் ஆண்களுக்கு முன்போ அல்லது அவர்களோடு ஒப்பிடும் பொழுது பெண்கள் தங்களை பலமற்றவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் கருதுகிறார்கள். இந்தத் தவறான எண்ணம் பெண்களுடைய மனதில் இருக்கும்வரை அவர்களுக்கு சுதந்திர வாழ்க்கையின் ருசி ஏற்படாது. அவர்களுடைய வாழ்க்கையும் சுதந்திரமும் ஆண்களால் அளிக்கப்பட்
கும்; பிறரால் அளிக்கப்பட்ட சுதந்திரம் போலியாகவும செயற்கையாகவும் பெயரளவிற்கு மட்டுமுள்ளதாகவும் இருக்கும். உண்மையில் அது அடிமைத்தனமே. இந்த நிலை இருக்கும்வரை பெண்கள் ஆண்களைப்போல் சம பலமும் சமத் தகுதியும் உள்ள வாழ்க்கைக்குப் பாத்திரமாக முடியாது.

மனிதனுடைய வீரத்தனமும் பலமும் ஆயுதத்திலேயோ சரீர உருவத்திலேயோ இல்லை. உலகத்தில் பல வீரர்கள் அந்தந்தக் காலத்தில் பெரும் சரீரம் படைத்தவர்களாகவோ அல்லது எல்லாவற்றையும் விட அதிக

ஆயுதம் தரித்தவர்களாகவோ இருந்ததில்லை. இராவணனைவிட இராமன் உடலில் சிறியவன். அவனுக்கு இரண்டு கைகள் இருந்தன. கம்ஸனைவிட கிருஷ்ணன் உருவத்தில் சிறியவர். திலகர், காந்தி, ஜவஹர்லால் நேரு, அல்லது நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் இவர்கள் அந்தந்தக்காலத்தில் மிகப் பெரிய மல்லர்களாகவோ ஆயுதம் தரித்த வீரனாகவோ கருதப்படவில்லை. அப்படியிருந்தும் அவர்களுடைய வீரத்தனத்தையும் தைர்யத்தையும் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். இந்தத் தத்துவத்தை பெண்கள் உணர்ந்து தம் மனதில் ஏற்றுக்கொள்வார்களேயானால் இன்று அவர்களுடைய போலி வலியின்மை க்ஷணத்தில் மாயமாய் மறைந்து விடும்.

காந்தியினுடைய சத்தியாக்கிரகம் பெண்களுக்கு பெரும் மகத்வம் வாய்ந்தது. சத்தியாக்கிரகப் புரட்சியில் பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான பராக்கிரமத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. பெண் வாழ்க்கையின் அடிப்படைக்கும் பெண்ணின் சுயமதிப்பின் ஆதாரத்திற்கும் சத்தியாக்கிரக முறையால் ஏற்படக்கூடிய புரட்சி, தோள் வலிமையின் உதவியால் இயங்கும் வேறு முறையில் ஒருபொழுதும் ஏற்படமுடியாது. பூமிதான யக்ஞ இயக்கத்தின் சிறப்பும் இதுவே.

*பெண்வாழ்க்கைப் பெருமை இயக்கம்*

உயிரைக் காப்பாற்றுவதற்கும் வாழ்க்கை நிர்வாகத்திற்கும் முக்கிய சாதனங்களாகக் கருதப்படுபவை ஆயுதங்களும் சொத்துக்களும் ஆகும். கையில் ஆயுதமு

டையவன் தன்னோடு மற்றவர்களையும் காப்பாற்றக்கூடும். ஆகையினால் ஆயுதம் தரித்த வீர புருஷனுக்கு தன் உடைமையெல்லாம் அர்ப்பணிப்பதில் பெண் பெருமைப் படுகிறாள். பொன் செழுமைக்கு அடையாளமாக விளங்குகிறது. பொன் படைத்தவனுக்கு சுகமும் பேரும் புழும் கிடைக்கவல்ல சாதனங்கள் எளிதிலே கிடைக்கக் கூடும். ஆகையினால்தான் பணக்காரனுக்கும் கூட எல்லாவற்றையும் அர்ப்பணிக்க பெண் துடிதுடிக்கிறாள். தகப்பன் பெண்ணுக்கு வரன்தேடும் பொழுது பிள்ளையின் மனதையோ அறிவையோ குணத்தையோ விட அவனுடைய லௌகீக சொத்தைப் பற்றி அதிகம் கருதுகிறான் என்பதே இதற்குப் பெரிய சான்று. சீமானாயிருப்பவன் செல்வம் படைத்தவனாக இருப்பான், அவன் பெண்ணுக்கு அதிக சுகத்தையும் சௌகர்யத்தையும் கொடுக்கக்கூடும் என்று கருதுகிறான். இதன் பலனாக பெண்கள் பெருமைப் பித்தர்களாகி விட்டார்கள் மனதிலும் எண்ணத்திலும் இல்லை. இந்தக் குற்றம் பெண்களின் உள்ளங்களிலும் எண்ணங்களிலும் அவ்வளவாக இல்லை; பெருமை அடிப்படையிலும் சமூக நிலையிலுமே இக்குறை இருக்கிறது. சமூக மதிப்பில் அடியோடு மாறுதல் செய்யக்கூடிய இயக்கமே பெண் வாழ்க்கையின் மதிப்பை சமூகத்தில் நிலைநிறுத்தக் கூடும். பெணகள் பள்ளிகளுக்கோ காலேஜுகளுக்கோ செல்லும் பொழுது எல்லாப் பெண்களிடமும் பொருளாதாரப் புரட்சிப் பாட்டையும் பொளாதாரப் புரட்சிப் பேச்சையும் நாம் கேட்டு வருகிறோம். ஆனால் உண்மை என்னவென்றால் இவர்களில் பல பெண்கள்

செல்வம் படைத்த சமான்களான கணவர்கள் வீட்டையே விரும்புவார்கள். இந்த முரண்பாடு சமூக அமைப்பில் இருக்கும் வரையில் கௌரவமான வாழ்க்கையை சட்டமோ திட்டமோ பெண்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க முடியாது.

*பெண்களுக்குத் தனி வாய்ப்பு*

"காஞ்சன் முக்தி" என்ற புரட்சி இயக்கம் பெண்களுடைய சுயார்ஜித வாழ்க்கையை உருவாக்கும் நல்ல சாதனம். ஆயுதம், பணம் ஆகிய இவைகளின் ஆட்சி நடைபெறுகிறது. இன்று நடைபெறும் ஆயுத ஆட்சியின் மதிப்பும் செல்வ ஆட்சியின் மதிப்பும் முடிவடைந்தபின் பெண்களுக்கு ஆண்களோடு சமத்வ நிலைமை ஏற்படுகிறது. இந் நோக்குடன் நம் நாட்டுப் பெண்களனைவரும் பூமிதான யக்ஞ இயக்கத்தில் செயலாற்றி ஈடுபடுவார்களேயானால் அவர்களுடைய பிரஜா உரிமையும் அரசியல் சுதந்திரமும், மா னி ட சாமர்த்தியத்தாலும் குணம் பொருந்திய பாத்திரம் ஆவதாலும் பூர்த்தி அடைவார்கள். பூமிதான யக்ஞ இயக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் "காஞ்சன முக்தி" ஏழை பணக்காரன் இருவரையும் சம நிலைக்குக் கொண்டுவருவதோடு மட்டுமல்லாமல் ஆண் பெண் இருவர்களிடையே வழக்கத்தினால், ஏற்பட்டதோ நிலைமையினால் ஏற்பட்டதோ போலி ஏற்றத்தாழ்வுகளை பரிபூர்ணமாக அழித்துவிடும். புதுயுகப் பெண்களுக்குப் பூமிதான யக்ஞ இயக்கம் ஒரு அற்புதமான அறிவிப்பு, அபூர்வமான நல்வாய்ப்பு,புறக்கணிக்க முடியாத அழைப்பு.

### சம்பத்து தானத்தின் புரட்சிகரப் போக்கு

பணக்காரர்களின் பணத்தில் ஆறில் ஒரு பங்கை கேட்டு வாங்க வேண்டுமென்று விநோபா ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். இது தவறான கருத்து என்றும், பொருந்தாதது என்றும் முதலில் தோன்றிற்று. பூமிதான யக்ஞ இயக்கத்தில் நிலப்பிரிவினையின் கற்பனைமட்டு மில்லை. புரட்சிகரமான குறிக்கோளே அதன் அடிப்படை. நிலமற்றவனுக்கு நிலம் கொடுப்பதுமட்டும் இவ்வியக்கத்தின் இலக்கு அல்ல. நிலமற்றவனாய் இருந்தும் நிலத்தை உழுது பயிர்செய்ய விரும்பியும் விவசாயம் தெரிந்தும், விவசாயம் செய்பவனும் ஆன உற்பத்தியாளனுக்கு நிலம் கொடுப்பது இவ்வியக்கத்தின் முக்கிய லக்ஷியம். எவனிடம் எவ்வளவு அதிகபக்ஷ நிலமிருக்க வேண்டும் அல்லது குறைந்தபக்ஷ நிலமிருக்க வேண்டும் என்பது பிரச்சினை அல்ல. உற்பத்திச்சாதனங்கள் எல்லாம் உற்பத்தியாளன் கையில் இருக்க வேண்டும் என்பதே பூமிதான யக்ஞத்தின் அடிப்படை லக்ஷியம்.

### 'காஞ்சன முக்தி'—புரட்சிகரமான சங்கல்பம்

இந்த இயக்கம் பணத்தின் மதிப்பை அழிக்கும் இயக்கம். உற்பத்தியாளன் உழைப்பின் பெருமையை நிலைநாட்டும் இயக்கம் இது. இதில் யாருக்கும் அனுபவிக்கக்கூடிய வஸ்துவை விநோபா கொடுப்பதில்லை. அனுபவப் பொருளை விலைக்கு வாங்கும் சாதனங்களையும் கொடுப்பதில்லை. உற்பத்திச் சாதனங்களே கொடுக்கிறார்கள். தான் யாரிடமிருந்தும் பணம் வசூலிப்பதில்லை,

தனக்கு உதவ விரும்புவோர் உற்பத்திச் சாதனங்களாக அல்லது உற்பத்தி கருவிகளாக வாங்கிக் கொடுக்கட்டும் என்று சொன்னபொழுது அவர் அற்புதமான புரட்சிகர சங்கல்பம் செய்திருக்கிறார். உபயோகமுள்ள வஸ்துவோ, அனுபவிக்கக்கூடிய வஸ்துவோ, விலைக்கு வாங்கும் சாதனம் பிறரிடமிருந்து பெற்றால் நாம் அச்சாதனங்கள் கொடுத்தவர்களுடைய உபகாரத்தை பெறுபவர்கள் ஆகிறோம். பெற்றுக்கொள்பவருக்குப் பெருமை ஏற்படுவதில்லை. ஆனால் உற்பத்தி.சாதனமோ, உழைப்பு சாதனமோ யாருக்காவது கொடுப்போமானால் நாம் அவர்களுக்கு உபகாரம் செய்வதாக ஆவதில்லை.

*பண தானத்தின் குறை*

இந்த நியாயம் செல்வத்திற்குப் பொருந்தாதது. செல்வம் சேர்ப்பதற்கு சுரண்டல் இன்றியமையாதது. பெரிய பெரிய தொழிற்சாலைகளை நடத்தி தொழிலாளிகளைச் சுரண்டும் ஒருவர் தன் செல்வத்தில் ஆறில் ஒரு பங்கை நமக்கு கொடுத்தால் இன்றுள்ள சமூக நிலையை நிலை நிறுத்த விரும்பி நம் சம்மதத்தை கோருகிறான் என்பதேயாகும். அவன் தன் தொழிற்சாலையில் ஆறில் ஒரு பங்கை நமக்குக் கொடுப்பதில்லை; தொழிலாளர்களை சுரண்டுவதை ஒரு விதத்திலும் குறைப்பதில்லை; சொந்த லாபத்தை அதிகப்படுத்திக்கொண்டே போகிறான்; சம்பாதிப்பதில் ஆறில் ஒரு பங்கு நமக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறான்; இப்படிப்பட்ட தானத்தில் தனிப்பட்டவருக்கு புண்யம் கிடைத்தாலும் கிடைக்குமே

யொழிய பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒரு பொழுதும் அழியாது.

### பாப மயமான தானம்

நீதி ஏற்படுத்தி அதைப் பரிபாலிக்கும் பிரச்சினை ஒன்றைக் கிளப்பக்கூடாது என்று வினோபா அவரவர்களுடைய தொகைக்கு அவரையே (டிரஸ்டியாக) தர்மகர்த்தாவாக ஆக்கிவிட்டார். இவ்வகையில் நீதி துஷ்பிரயோகம் ஆகும் சந்தர்ப்பம் குறைகிறது. ஆனால் கொடுப்பவருடைய நிலையில் அடிப்படையான மாறுதல் ஒன்றும் ஏற்படுவதில்லை. இவ்வகை தானம் சமூகத்தில் பொருளாதார அமைப்பை மாற்றும் சாதனமாக ஆக முடியாது. ஒரு ஆட்டக்காரி, ஒரு விபசாரி, ஒரு மதுபான கடைக்காரன் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்களும் தன் சம்பாத்தியத்தில் ஆறில் ஒரு பங்கு வினோபாவுக்கு வழங்கலாம்—பிராயச்சித்தம் என்ற முறையில் அல்ல. தனிப்பட்ட புண்யத்தை சம்பாதிக்கவே. நல்ல முறையிலும் நியாயமான தொழிலை நடத்துபவர்கள் தன் சம்பாத்யத்திலிருந்து தானம் செய்வது போலவே மேற்கூறியவர்களும் செய்வார்கள். திருடன் தன் திருட்டுச் சொத்தில் கொஞ்சம் கடவுளுக்கு அர்ப்பணிக்கிறான், சுரண்டுகிறவர்களும் கோவில், குளம், சத்திரம், சாவடி ஏற்படுத்தி தான வீரர்கள் ஆகிவிடுகிறார்கள்.

### உண்மை இலக்கு

அப்படியானால் வினோபாவின் இப்புதிய சின்னத்தின் அர்த்தம் என்ன? செல்வ வினியோகம் தன் உத்திரவுப்

படி செய்யப்படவேண்டு மென்றும், தானங்கொடுத்தவர் அபிப்பிராயம் கேட்கப் படினும், விேைபாபாவே இவ்விஷயத்தில் கடைசி தீர்ப்பு அளிப்பார் என்றும் அவர் சொல்லுகிறார். ஒரு தொழிலதிபர் விேைபா உத்திரவுப்படி பிரதி வருஷமும் தன் சொத்தில் ஆறில் ஒரு பங்கு கொடுத்தால் அந்தப் பணத்தில் அதே தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிகபக்ஷ சுகாதார வசதிகளும் அவர்கள் பண்பு ஓங்கச் சாதனங்களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று சொல்வதுடன் கொஞ்சம் கொஞ்சமாக தன் தொழிற்சாலை முழுவதுமே தனக்கு ஒப்படைத்து விடு என்றும் விேைபா கூறுகிறார். தன்பெயரில் கொடுத்த பணத்தில் இந்த உற்பத்தி சாதனங்களையும் விவசாயத்திற்காக இந்த இந்த கருவிகளையும் வாங்கிக்கொடு என்று ஒரு வட்டிக்கடைக்காரனிடம் விேைபா சொல்லக்கூடும். அதோடு கூட இந்த முறையில் பொருள் சம்பாதிப்பதோ, செல்வம் சேர்ப்பதோ பாபமயமானது. ஆகையால் கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் தொழிலையே நீ நிறுத்திவிடு என்று அவர்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கும். ஒரு தரகர் ஆறில் ஒரு பங்கு கொடுத்தால் உன் தொழில் பாபமயமானது. அதை நிவர்த்தி செய்ய நீ எனக்கு ஆறில் ஒரு பங்கு கொடுப்பதானல் கூடிய சீக்கிரம் இந்த பாபமயமான தொழிலை விட்டுவிட வேண்டும் என்று விேைபா சொல்லுவார்.

*உற்பத்தியற்ற தொழிலை விட்டு விடு*

ஆறில் ஒரு பங்கு சம்பத்து தானத்தில் செல்வத்தை விட்டுவிடும் கருத்தோடு கூட உற்பத்தியற்ற தொழில்

களையே விட்டு விட வேண்டும் என்ற கருத்தும் இருக்கிறது. நல்லதோ கெட்டதோ எவ்வகையிலும் செல்வத்தைச் சேர்த்து ஆறில் ஒரு பங்கை வி னோ பா வி ற் கு கொடுத்து புண்யாத்மா என்ற மதிப்பைப் பெற்றுவிட நினைத்தால் வினோபாவின் குறிப்பை அறிந்தவன் ஆக மாட்டான். செல்வத்தில் தன் பங்கை விநியோகிப்பதைப் பற்றி வினோபா உத்திரவு கொடுக்கும் போதுதான் வினோபாவினுடைய குறிப்பின் முழு அர்த்தமும் இந்த தானங் கொடுத்தவருக்கும், பொதுமக்களுக்கும் நன்கு விளங்கும்.

*அகண்ட தானத்தின் முறை*

பெரிய பெரிய நிலச்சுவான்தார் தன் நிலத்தில் ஆறில் ஒரு பங்கைக் கொடுத்து மிகுதியான ஐந்து பங்கை தான் அனுபவித்து சௌக்கியமாக இருப்பான் என்று நினைத்து சிலருக்கு பூமிதான யக்ஞத்தைப்பற்றி தப் பெண்ணம் இருக்கிறது. இப்படிக் கருதுபவர்கள் பூமிதான யக்ஞ இயக்கத்தின் அடிப்படையே உணரவில்லை பூமிதான யக்ஞத்தில் செல்வத்தையும், தனி சொத்துரிமையையும் விட்டு விடும் குறிக்கோள் இருக்கிறது. இன்று ஆறில் ஒரு பங்கு கொடுப்பவன் நாளை இதைவிட அதிகம் கொடுப்பான்; தன் செல்வம் எல்லாம் விட்டு விடும் வரையில் தானம் கொடுத்துக்கொண்டேயிருப்பான். அப்படி இல்லையானால் பூமிதான யக்ஞத்தின் மூலமாக அஹிம்சை முறைப்படி நிலங்கள் சமமாக எப்படி விநியோகமாக முடியும்.

இச்சந்தர்ப்பத்தில் விநோபாவினுடைய இந்தப் புதுப் போக்கை பார்த்து புரிந்துகொள்ள வேண்டும். சமூகத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படுத்தும் தொழிலோ, நெறியற்ற தொழிலோ, செய்பவர்களும் தன் வருவாயில் ஆறில் ஒரு பங்கைக் கொடுத்து மதிப்புப் பெற முடியாது. ஆறில் ஒரு பங்கு தானத்தில் உற்பத்தியற்ற தொழிலை விட்டு விட விரும்பும் குறிக்கோளும் அடங்கியிருக்கிறது. விநோபாவினுடைய இந்த புது கருத்தின் பரிபூரண பொருள் விளங்க விளங்க மக்கள் இக் கருத்தின் முழு பலன்களையும் உணரக்கூடும்.

## 11

## *சம்பத்து தான யக்ஞத்தின் விரிந்த உருவம்*

விநோபாவின் இயக்கத்தில் மஹா வாக்கியத்தைப் போல இரண்டு மந்திரங்கள் அடிக்கடி உச்சரிக்கப்படுகின்றன. ஒன்று உலகிலுள்ள நிலமனைத்தும் உலக நாதன் உடைமையே; மற்றொன்று செல்வ மெல்லாம் சொக்க நாதன் உடைமையே என்பதாம். தான யக்ஞ இயக்கத்தின் சம்பந்தம் முதல் மஹா வாக்கியத்தில் இருக்கிறது. பூமி கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது. அது சிருஷ்டியின் ஓர் ஐஸ்வரியம். ஆகையால் அதன் மேல் மனிதன் உடமை கொண்டாடக் கூடாது. உணவு உற்பத்திக்காக அதில் உழைக்கக் கூடியவனுக்கு உற்பத்தி செய்யும் உரிமை கிடைக்க வேண்டும். உற்பத்தி செய்யாதவனுடைய அதிகாரம் வேருடன் நீக்கப்பட வேண்டும். பூமி தான யக்ஞ இயக்கத்தின் பொருள் இதுவே.

## புண்யமான முறை

உழைத்துச் சம்பாதிக்கும் சொத்தில் யாருக்கு உடைமை உண்டு என்ற பிரச்னை எழுகிறது. எவ்வளவு செல்வத்தை உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வளவிற் உடைமை கொண்டாடுவதா அல்லது ஓர் அளவு செல்வத்திற்கு உடைமை கொண்டாடுவதா? இப்படி ஏற்படு மாறுல் வர்க்க பேதம் அழிந்த போதிலும் பொருளாதார ஏற்றத் தாழ்வு அழியாது. ஆகையிறுல்தான் விநோபா "சம்பத்தி தான யக்ஞம்" என்ற புண்ய முறையை வகுத் திருக்கிறுர்.

பூமிதானம் ஏழை பணக்காரர் இருவருக்கும் எப்படிப் பொருந்துமோ அப்படியே சம்பத்துதான யக்ஞம் ஏழை பணக்காரர் எல்லோருக்குமே பொருந்தும். பெரும் பணம் படைத்தவன் தன் பணப் பெருமையை விட்டு விட சம்பத்துதானம் செய்ய வேண்டும், பணமற்றவன் தன் வறுமையால் சமூகத்தில் மக்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பசித்திருப்பவன் தன் பசியையும் நமக்குத் தானமளிக்கட்டும் என்ற அளவிற்கு விநோபா சொல்லியிருக்கிறுர். இது வெறும் வாய்ப் பேச்சல்ல. விநோபாவின் இந்தக் கோரிக்கை இவ்வியக்கத்தில்உள்ள பரந்த தத்துவத்தின் சின்னமே.

## இடியிலும் அடியிலும் பங்கு

பள்ளிக் கூடப் பாடப் பத்தகத்தில் படித்த கதை ஒன்று நினைவிற்கு வருகிறது. ஒரு செம்படவன் ஒரு இணை

யற்ற ஜாதி மீனை எடுத்துக் கொண்டு அரச மாளிகையின் தலைவாசலுக்குச் சென்றான். சிப்பாய் அவனைத் தடுத்தான். செம்படவன் உள்ளே நுழையக் கெஞ்சின பொழுது சிப்பாய் சொல்லலானான். "அற்புதமான மீனிது. அதிருஷ்ட வசத்தால் எப்பொழுதாவதுதான் இப்படிக் கிடைக்கும். உன்னை அதிருஷ்டம் தேடிவந்துவிட்டது. உனக்குக் கிடைப்பதில் பாதி எனக்குக் கொடுப்பாயானால் நான் உன்னை உள்ளே விடுவேன்." செம்படவன் "சரி" என்று வாக்களித்து உள்ளே சென்றான்.

மீனைப் பார்த்து அரசன் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தான். "நீ வேண்டிய பொருளைக் கேள் என்று அரசன் சொன்ன உடனே செம்படவன்," அரசே! திறந்த முதுகில் தொண்ணூறு கசையடி கொடுங்கள் வேறு ஒன்றும் விருப்பமில்லை என்று சொன்னான். அரசன் பிரமித்து விட்டான். ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. "இந்தச் செம்படவன் பைத்தியமோ?" என்றான் அரசன். "அரசே, ஏழையின் இந்த விருப்பம பூர்த்தியாகட்டும்." என்றான் செம்படவன். அப்பொழுது அருகிலிருந்த சிப்பாய் "அரசே இவனை மெதுவாக அடியுங்கள்" என்றான். பாதி அடி முடிந்தவுடன் செம்படவன் "நிறுத்துங்கள், நிறுத்துங்கள் இந்த போத்தில் எனக்கொரு பங்காளி இருக்கிறான்" என்று கத்தினான்.

அரசன் ஆச்சரியத்தில் மூழ்கினான். "உன் கூட்டாளி யாரப்பா ?" என்று வினவ "அரசே தங்கள் அரண்மனை வாயிற்காப்போன் என் கூட்டாளி" என்று சொல்லி முன் நடந்ததை விவரித்தான். அரசன் கோபத்திற்கு ஓர் எல்லையில்லை. காவலாளியைக் கூப்பிட்டு கசையடி கொடுத்து முதுகுத் தோலை உரித்துவிட்டான்.

*சம்பத்துதான யக்ஞம்-ஒரு மாற்று.*

விநோபாவின் சம்பத்துதான யக்ஞத்தில் இதுவும் ஒரு கட்டம். ஏழை எளிய மக்களின் துக்கத்திலும் வேலையில்லாத் திண்டாட்டத்திலும் அவரும் பங்காளியாக விரும்புகிறார். வேலையின்மை பங்கீடு ஆகுமேயானால் வேலையும் சரிவர விநியோகம்ஆகும். ஒரு விதத்திலும் உழைக்காமல் இருந்து குடும்ப அதிகாரத்தினாலோ, பரம்பரைச் சாதனங்களாலோ, சீமான்களாக இருப்பவர்களின் சம்பத்து "விபத்து" என்று விநோபா பட்டம் சூட்டியிருக்கிறார். உற்பத்தி செய்யாதவர்களுடைய செல்வம் முழுவதையும் விட்டு விடுவதும், உற்பத்தி முறை இல்லாத தொழில்களை விட்டு விடுவதும் சம்பத்துதான யக்ஞத்தின் இலக்கு ஆகும். இதற்காகத்தான் ''விநோபாவினுடைய உத்தரவின்படி இத்தொகை செலவு செய்யப்படும்''. என்று சம்பத்து தான யக்ஞத்தின் பெயரால் கிடைக்கும் சம்பத்து தானத்தில் ஒரு நிபந்தனை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்த நிபந்தனையின் காரணமாக இவ் வியக்கத்தில் விநோபாவின் கண்காணிப்பு இருக்கிறது. "இந்த நிபந்தனையின் மூலம் செல்வவந்தர்களின் வாழ்க்கையில் நான் நுழைந்து முதலில் சம்பத்து தானம் செய்ய வேண்டுமென்று அவர்களை சங்கல்பம் செய்ய வைத்து அதன் பின்பு உடனடியாக அவர்கள் நியாய வழிக்கு வரவேண்டுமென்று கோருவேன். செல்வம் சேர்க்கும் முறைகளும் வழிகளும் நியாயமாக இருக்க வேண்டும் என்று சம்பத்து தானம் கொடுப்பவர்களை வற்புறுத்துவேன்" என்று விநோபா சொல்லுகிறார். இவ் வகையில் சம்பத்துதான

யக்ஞம் என்பது தனி ஒரு நிலைமை மட்டுமல்லாமல் அதி விரைவிலே சொத்துடைமையை விட்டுக்கொடுக்கும் சூழ் நிலையை ஏற்படுத்துவதில் வெற்றி காணும் ஒரு முறையாக அமைந்திருக்கிறது.

*சேர்ப்பது பாபம், சம்பத்து தானம் அதற்கு மாற்று*

இன்று சேர்த்து வைத்திருக்கும் பொருளில் ஒரு பங்கு, முடியுமானல், ½ பங்கு, சம்பத்து தானம் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும் என்பதை மட்டும் இப்பொழுது விநோபா சொல்கிருர். தான் சேர்த்து வைத்திருக்கும் பொருளுக்குத் தன்னை எஜமானன் என்று கருதாமல் தான் அப்பொருளுக்குத் தர்மகர்த்தா என்று கருத வேண்டு மென்பது அவரது கருத்து. இதுவரை சேர்ந்திருக்கும் பொருள் உண்மையில் நியாயமானது அல்ல. ஆகையி ஞல் மேலும் செல்வம் சேகரிக்காமல் கூடிய சீக்கிரம் அதை விநியோகித்துவிட வேண்டும். சேர்த்து வைக்கும் தன்மையை விட்டு விடுவது வவ்வாமை என்ற சமூ கத்தை அமைப்பதற்கே சம்பத்துதான யக்ஞத்தில் இந்த அடிப்படைத் தத்துவத்தைக் கருதவில்லையாஞல் புரட்சி முறையில இவ் வியக்கத்திற்கு இடமே இருக்காது.

சேர்த்து வைப்பது பாபம், சம்பத்துதானம் அந்தப் பாபத்திற்கு ஒரு மாற்று. உற்பத்தி இல்லாத் தொழில் மூலமோ, நெறி அற்ற தொழில் மூலமோ செல்வம் சேர்ப்பது பெரும் பாவம் என்ருல் அது மிகையாது. உற் பத்தி இல்லாத் தொழில் என்பதை இரு கூருகப் பிரிக்க லாம். மற்றவர் நோயால் தன் வைத்தியத் தொழிலை வளர்ப்பதும், தீச் செயலில் ஈடுபட்டிருக்கும் அல்லது

ஈடுபட விரும்புபவர்களின் தீய எண்ணங்களால் தன் தொழில்களை வளர்ப்பதும் ஒரு வகையாகும். தொழிலும், வாடகைத் தொழிலும், ஒப்பந்தத் தொழிலும் (Contract) தாகுத் தொழிலும் மற்றொரு வகையைச் சேர்ந்ததாகும். சமூகத்தில் இத்தொழில்கள் இருககும வரையில் ஒரு மனிதன் மற்றவனுடைய கஷ்டத்திலோ, குற்றத்திலோ லாபம் அடைந்தே வருவான். இதுவே சுரண்டலின் ஆணி வேர் ஆகுகிறது. இப்போப்பட்ட தொழில்களால் கிடைக்கும் வருவாயிலிருந்தும் ஒரு பங்கு விநோபாவுக்குத் தானம் கொடுக்க விரும்புவார்கள். ஆனால் ஒரு பக்கம் அவர்கள் தம் வருவாயைப் பெருக்கிக்கொண்டும் மற்றொரு பக்கம் விநோபாவிற்கும் பண தானம் கொடுத்துக் கொண்டும் இருப்பார்களேயானால் அவர்களுடைய தானத் தால் கொடுப்பவர்களின் ஆத்மீக வளர்ச்சியோ, அல்லது சமூக நன்மையோ ஏற்படாது. இந்தத் தொழில்களைப் பற்றிய கருத்து மாறி அந்த சம்ஸ்காரத்தின் காரணமாகவோ அதன் அடையாள பூர்வமாகவோ சம்பத்துத்தானம் செய்வது அவசியம்,

### நல்ல மனம், நல்ல சமுதாயம்.

வவ்வாமை விரதத்தைத் தனிப்பட்டவர் குணமாகக் காண்பதற்குப் பதிலாக சமூக மதிப்பு ஏற்படுமளவில் இந்த விரதம் வளர வேண்டும் என்று விநோபா ஒரு சொற் பொழிவில் கூறினார். தனி மனிதர் குணம் சமுதாய மதிப்பு என்று உருவத்தில் மாறும் பொழுது அதில் சமூகப் புரட்சியின் சக்தி ஏற்படுகிறது. சம்பத்து தானத்தின் முடிவு கூடிய சீக்கிரம் சமூக விரோதமானதும், உற்பத்தி

இல்லாததுமான தொழில்களை விட்டு விடுவதாக ஆக வேண்டும். ஆகையினால்தான் வினோபா யாரிடமிருந்தும் மொத்தமாக ஒரே முறையில் பண தானம் வாங்குவதில்லை. 5 வருஷத்திற்குக் குறைவான கால வரையறைக்கு சம்பத்துத் தானம் கொடுக்கும் பத்திரங்களை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. உபயோகப் பொருள்களின் தானத்தை ஏற்றுக்கொள்ளும் போதும் அவர் ஒப்பிட்டுப் பார்க்கும் எண்ணத்தையும் விவேகத்தையும் கடைப்பிடிக்கிறார். உதாரணமாக அபினி, கஞ்சா விற்கும் வியாபாரி அந்தப் பொருள்களைத் தானம் செய்ய விரும்பினாலோ, அல்லது அதனால் கிடைக்கும் தன் பங்கின் ஒரு பகுதியை வாழ் நாள் முழுதும் கொடுக்க விரும்பினாலோ அதை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவார். உற்பத்தியாளருக்குப் புகையிலை, பீடி, சிகரெட் முதலியவைகளை இனமாகக் கொடுக்கச் சத்திரம் யாராவது ஏற்படுத்தினால் அதையும் அவர் எதிர்ப்பார். அதைச் சம்பத்துத் தானம் என்று சொல்ல மாட்டார். சம்பத்து தானத்தில் நல்ல பணமும், அதைச் சம்பாதிக்க நல்ல முறையும் அடிப்படையான கொள்கை ஆகும்.

*தர்மகர்த்தாவின் நிலைத் தோற்றம்.*

காந்தீஜி வகுத்த தர்மகர்த்தாத் தத்துவத்தை சம்பத்துத்தான யக்ஞ ரூபத்தில் வினோபா பரவலாக வளர்த்து வருகிறார். ஆகையினால் அவர் இதற்கு "யாகம்" என்றுபெயரிட்டிருக்கிறார். யாகத்திலே தியாகம் இருக்கிறது. தானத்திற்கும், யாகத்திற்கும் ஒரு அடிப்படையான வேற்றுமை உண்டு. தன் தேவைகள் முழுவதையும் பூர்த்தி செய்து

கொண்டு தன் இஷ்டங்களை வேண்டிய அளவு பூர்த்தி செய்து கொண்டு எஞ்சியிருப்பதையே நாம் சாதாரணமாகத் தானம் செய்கிறோம். மிச்சம் இருக்கும் பொருளே தானம் செய்யப்படுகிறது. ஆனால் யாகத்தில் எல்லாம் ஆஹுதி செய்யப்படுகிறது. நம்முடைய தேவைகள் பூர்த்தி ஆனாலும், ஆகாவிட்டாலும் நமது கஷ்டத்திலும் கூட யாகத்தில் ஆஹுதி செய்கிறோம். நசிகேதனுடைய தகப்பன் "விஸ்வஜித யஜ்ஞ" உலகம் பூராவையும்ஜெயிக்கும் யாகம் செய்தான். அவனிடம் மெலிந்து வற்றிப் போன பசுமாடுகளே மீதி இருந்தன. அவைகளையும் அவன் தானம் செய்துவிட்டான், அவன் செத்த மாட்டை பிராமணனுக்குக் கொடுக்கவில்லை. தனனிடம் இருந்ததையே கொடுத்தான். அவனிடம் செல்வம் செழுமையாக இல்லை. ஆகையினால் தன் குறையையே ஹவிர் பாகமாகக் கொடுத்தான். "உழைப்பாளிகளே! உங்களிடம் உழைக்கும் சக்தி இருக்கிறது. நீங்கள் அதையே எனக்குத் தானமாக அளியுங்கள். உங்கள் சக்தியை நீங்கள் தானமாகக் கொடுத்தால் உங்களுடைய கஷ்டம், உங்களுடையக் குறைவு, வறுமை யெல்லாம் உலகம் முழுவதிலும் பாவி சமமாகப் பகிர்ந்து போகும். உன்னிடம் இருப்பதை நீ கொடுப்பதினால் உன் தேவை மற்ற அனைவருடையத் தேவையாகவும் உன் கஷ்டம் மற்றனைவருடைய கஷ்டமாகவும் ஆகிவிடுகிறது" என்று வினோபா சொல்லுகிறார்.

*அனைத்தும் அடங்கிய அடிப்படையான யாகம்*

இந்த முறையில் ஒரு ஆழ்ந்த அடிப்படையான இறுதிப் பொருள் ஒன்று உண்டு. நம் சமூக வாழ்க்கையின் அடித்தளத்தை அடையக் கூடிய ஆழ்ந்த கருத்து

இருக்கிறது. இந்த சமூகத்தில் உழைப்பாளிகளாயிருந்து உற்பத்தி செய்பவர்களும் உழைப்பில் சிரத்தைக் காட்ட வில்லை. உழைப்பிலும் உற்பத்தியிலும் அவர்களுக்கு நாட்டமில்லை. உற்பத்திசெய்யாதவர்களோ உழைப்பை வெறுக்கிறார்கள். உழைப்பில் தேட்டம் இல்லாமல் உற்பத்தி வேண்டுமென்ற சமூகக் கருத்து ஒரு பொழுதும் ஏற்படாது. ஆகையினால்தான் விநோபாஜீ உழைப்பாளிகளும் சம்பத்து தானம் கொடுக்க வேண்டுமென்று உபதேசம் செய்கிறார். முதலாளி இல்லாமல் வெறும் கூலிக்காரனாக இருப்பவனை பூமிதான யக்ஞ முறையில உற்பத்திச் சாதனங்களுங்கு உடைமையாளனாக ஆக்க விநோபா விரும்பினாலும் அத்துடன் தன் உழைப்பினால் கிடைத்த வஸ்துக்களையோ தன் சொந்த உடைமையெனக் கருதக் கூடாது என்று விநோபா உபதேசிக்கிறார். கோடீஸ்வரன், லட்சப்பிரபு, பெரிய செல்வச் சீமான்கள் ஆகியவர்கள் செல்வத்திற்குத் தாமகர்த்தாவாக இருப்பது போல ஒரு ஏழைத் தொழிலாளியும் தன் வருவாய்க்கு எஜமானனாக ஆகாமல் தர்மகர்த்தாவாகவே இருக்க வேண்டும்; ஆகையால் ஏழைத் தொழிலாளியும் சம்பத்து தானம் செய்ய வேண்டும். இதுமட்டுமல்ல; நிலமற்றுவனுக்கு நிலம் கொடுத்து அவன் முதல் வெள்ளாமை எடுக்கும்பொழுது "தரித்திர நாராயணனுக்கு" நிவேதனம் செய்யவேண்டும். நிவேதனம் செய்வதில் பெரிய செல்வமென்றோ மிகச் சிறிய பொருளென்றோ கருதப்படுவதில்லை. விறகு வெட்டியும் தன் நெற்றி வேர்வை நிலத்தில் விழச் சம்பாதித்ததில் கொஞ்சம் கடவுளுடைய பாதத்தில் நிவேதனம் செய்கிறான். விநோபாவினுடைய சம்பத்துதான யக்ஞம் இவ்

வளவு தூரம் எல்லாம் அடங்கியதாகவும் அடிப்படையுள்ளதாகவும் இருக்கிறது.

*சம்பத்து தானத்தின் உருவம் : இன்றும் நாளையும்*

இந்த சம்பத்துத்தான யக்ஞத்தில் இரு அம்சங்கள் இருக்கின்றன. செழுமை - வறுமை தீரும் வரையில் ஒவ்வொரு செல்வவந்தரும் தன்னைத் தர்மகர்த்தாவாக மட்டும் நினைத்துக்கொள்ள வேண்டும். மக்களுடைய சொத்து பாதுகாப்பிற்காக எப்படியோ அவர்களிடம் சேர்ந்துவிட்டது. அதைக் காப்பாற்றி வெகு சீக்கிரத்தில் வர்க்க பேதம் தீர்க்கும் புரட்சியில் உபயோகப்படுத்த வேண்டும். இப்படிப் பணக்காரர்களுடைய சம்பத்து தான யக்ஞம் கழியும் காலத்திற்கு ஏற்றதாக இருக்கிறது. காலசந்தியின் பரம தர்மம் இதுவே.

நாம் எல்லோரும் நல்லது கெட்டது எந்த வழியிலும் பொருள் சம்பாதித்து விநோபாவின் சம்பத்து தான யக்ஞத்திற்கு நம் சௌகர்யப்படி தானம் வழங்கி இந்த லோகத்தில் கீர்த்தியும் பரலோகத்தில் நற்கதியும் அடைந்துவிடலாம் என்று ஒருவரும் நினைக்கக்கூடாது. முன்னாள் சம்பத்துத் தானத்தில் கோவில் கட்டுவது, படித்துறை ஏற்படுத்துவது சத்திரம் அமைப்பது, மருத்துவச்சாலைகள் பள்ளிகள் திறப்பதுமான பலவகைப் பொது நலக் காரியங்கள் அடங்கியிருந்தன. விநோபாவினுடைய சம்பத்து தான யக்ஞம பொதுநல இயக்கம் மட்டுமல்ல. அது பொதுமக்கள் வாழ்வில் புரட்சி ஏற்படுத்த விரும்புகிறது. அது வெற்றியடையும் தினத்தில் சேர்த்து

வைக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு இடம் இராத தோடு மேற்கூறின தானத்திற்கு அவசியமும் இருக் காது. இந்த சம்பத்து தானம் உண்மையில் கருத்து தானத்திற்கும் புத்தி தானத்திற்கும் சின்னமாக விளங்கு கிறது. ஆழ்ந்து சிந்தித்தால் விநோபா விரும்புகிற புத்தி தானம் "அறிவுத் தொழில் செய்பவர்கள்" கொடுக்கும் காலதான மட்டுமே அல்ல; ஆனால் சேர்த்துவைக்க வேண்டுமென்ற கருத்தையே விட்டுவிடுவது உண்மை யில் இந்த தானத்தின் லக்ஷ்யம்.

சம்பத்துத் தான யக்ஞத்தில் இரண்டாவது அம்சம் நித்ய தர்மம். உழைப்பினால் கிடைப்பதெல்லாம் மக்க ளான மாதவனுடைது. சமூகத்தில் தனி மனிதன் திற மைக்கு கிடைத்த வாய்ப்பு சமூகத்தினால் அளிக்கப்பட்ட வரப்பிரசாதம். எனவே தன் திறமையால் கிடைக்கும் பொருள்களுக்கெல்லாம் சமூகத்தின் உடைமையை ஒப் புக்கொள்ள வேண்டும். உற்பத்தியாளரின் சம்பத்து தான யக்ஞம் இந்த அன்றாட சமூக தர்மத்தின் சின்னமாகும். தன் தேவைக்கு அவன் எடுத்துக் கொள்வதெல்லாம் சமூகத்தின் அன்பளிப்பு. இவ்வாறு அவன் சமூகத்திற்கு அதிகபக்ஷம் அளித்து சமூகத்திலிருந்து குறைந்த பக்ஷம் ஏற்றுக்கொள்ளுகிறான். இவ்வகை சம்பத்துத் தான யக்ஞத்தில் உழைப்பின் சிரத்தை வளர் கிறது. உழைப்பாளியின் அறிவும் கருத்தும் மாறுகிறது. விநோபாவின் உழைப்பு தான யக்ஞத்தைப் போல அவருடையசம்பத்துத் தானயக்ஞமும் அறிவோடு சேர்ந்த தாகுகிறது.

*வாழ்க்கை சீர்படும் சங்கல்பம்*

சம்பத்து, முதலாளித்வம் என்பவை பற்றி ஒரு முற்றிலும் புதிய கருத்து சிறிய பெரிய உடமையாளரிடமும், உடமையற்ற தொழிலாளரிடமும் ஏற்படும் போதுதான் திருடாமை, வெளவாமை விரதங்களுக்கு சமூக மதிப்பு உண்டாகும். இதற்கு முதன் முதலில் நமது முக்கியமான பொதுஜன ஊழியர்கள் மனதில் இந்தமாதிரி எண்ணம் உருவாக வேண்டும். இந்த நாட்டு நிராயுத பாணிகளான மக்கள் ஆயுத பலம் கொண்ட சேனைகளை எதிர்த்து நிற்க வேண்டியிருந்தவரையில் காந்திஜி ஆயுதமற்ற வீரத்தனமுறையை கற்றுக்கொடுத்தார். ஆயுதத்தை ஆயுதத்தால் எதிர்க்கக்கூடாது என்பதே இம் முறையின் அடிப்படைத் தத்துவம். எதிர்ப்பவன் கையில் ஆயுதம் இருக்குமானால், நமக்கும் ஆயுதம் வேண்டும் என்று எண்ணக்கூடாது. "கொள்கையளவில் இருந்த போதிலும் சரி, ஆயுதமற்ற முறையைக் கையாள விரும்புவாயானால் ஆயுதம் உபயோகிக்க வேண்டும் என்ற எண்ணத்தையே உண்மையான மனதுடன் விட்டுவிடவேண்டும் என்று காந்திஜி நமக்குச் சொல்லியிருக்கிறார். ஆகையால்தான் ஆயுதம் தரித்த சீக்கியர்களும், ஆயுதத்தில் நம்பிக்கையுள்ள பட்டாணியர்களும் வாய்திறவாமல் எதிரியின் ஆயுத அடிகளைப் பொருத்துக்கொண்டே தன் ஆயுதங்களை உபயோகிக்கவில்லை. தற்காலிகக் கொள்கையாயினும் அதைக் கடைப்பிடிப்பதிலும் ஒரு உண்மையும் நேர்மையும் தேவையே.

அஹிம்சைக்கு இந்தச் சட்டம் எவ்வளவு பொருந்துமோ அதைப்போல் பன்மடங்கு அதிகமாக அதே சட்டம் திருடாமைக்கும், வெளவாமைக்கும் பொருந்தும். சொத்துடமை மோகத்தையும், தனது என்ற மகாரத்தையும் கொஞ்ச நேரமோ, குறிப்பிட்ட காலம்வரையோ விட்டுவைப்பதால் சமூகத்தின் உருவம் மாருது. முதலாளி என்ற எண்ணமும், சம்பத்து ஆசையும் அடியோடு விட்டுவிட வேண்டும். ஆயுத ஆட்சியைத் தவிர்க்க சத்தியாக்ரஹ எதிர்ப்பு முறையை காந்திஜி மாபெரும் சோதனையாக நடத்தினுர். பூமிதானம், சம்பத்து தானம் ஆகிய யக்ஞங்கள் என்ற முறையில் விநோபா பண ஆட்சியைத் தவிர்க்க வெற்றிகரமான சோதனை நடத்துகிருர். தற்காலிகக் கொள்கை என்ற வகையில் அஹிம்சையை ஏற்றுக்கொள்வது அந்த நிலையில் போதுமானதாய் இருந்தது. ஆனுல் இங்கோ, சேர்த்துவைப்பதை விட்டுவிடுவதும், சம்பத்தை தானம் செய்வதும் தத்துவ ரீதியிலும், நித்தியம் பின்பற்றவேண்டிய தர்மமுறை என்ற ரீதியிலும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஊழியர்களிடம் இந்த நம்பிக்கை இருக்கும் அளவு நமக்கு இதில் வெற்றி கிடைக்கும். கருத்துத்தான் முக்கிய பிரச்னே, அந்த கருத்திற்கேற்ப வாழ்க்கையைச் சீர்படுத்தும் சங்கல்பமே நம் பிரச்னே.

காந்தீய - சர்வோதய

பூதான

இலக்கியத்திற்கும்

# "சர்வோதயம்"

மாதப் பத்திரிகைக்கும்

இங்கு எழுதுங்கள் :

## சர்வோதய பிரசுராலயம்

(அகில பாரத சர்வ சேவா சங்கம்)

தஞ்சாவூர்.

| | | | |
|---|---|---|---|
| வணிகரே வாரீர் | 0 | 3 | 0 |
| கிராமங்களின் ஆரோக்கியத் திட்டம் | 0 | 2 | 0 |
| ஒரு மாபெரும் அநீதி | 0 | 4 | 0 |
| வினோபாவின் குரல் | 0 | 8 | 0 |
| பூதான ஜோதி | 0 | 2 | 0 |
| பூதானத்தின் புரட்சித் தன்மை | 0 | 1 | 0 |
| வினோபாவின் வாழ்க்கை | 0 | 2 | 0 |
| பூதான உதயம் | 0 | 1 | 0 |
| சம்பத்துதான யக்ஞம் | 0 | 4 | 0 |
| பூதானப் பாடல்கள் | 0 | 0 | 6 |
| வாலிபர்களுக்கு அழைப்பு | 0 | 1 | 0 |
| ஜீவன் தானம் | 0 | 1 | 0 |


சர்வோதய பிரசுராலயம்

*தஞ்சாவூர்*